24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 95 | மாசி 18ஆம் நாள் | சனிக்கிழமை | 02 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

### மன்னார் புதைகுழிவழக்கு

## கட்டளைக்காக ஏப்பிரலுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி வழக்கு கட்டளைக்காக ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரியை கார்பன் பரிசோதனைக்கு எங்கே அனுப்பி வைப்பது என்பது தொடர்பான அறிவித்தல் நேற்று வழங்கப்பட இருந்தது.
மன்னார் நீதிவான் மன்றுக்கு வராமையினால், ஏப்பிரல் 22 ஆம் திகதி >> 08

### மீண்டும் மீறப்படும் வாக்குறுதி

# வடக்கில் 7 சிங்களவர்கள் சாரதிகளாக நியமிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2
வடக்கு மாகாணத்திலுள்ள 4 மாவட்டச் செயலகங்களுக்கு ஒரே நாளில் சிங்கள இளைஞர்கள் இரகசியமாக சாரதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடகிழக்கில் சிங்களவர்களை சிற்றூழியர்களாக, சாரதிகளாக நியமிக்கமாட்டோம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதி மீண்டும் மீறப்பட்டுள்ளது.
வடகிழக்கு மாகாணங்களில் கொழும்பு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள திணைக்களங்களுக்குச் சிற்றூழியர்களாக, சாரதிகளாக தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர்.
இது தொடர்பில் தமிழ்த் >> 19

## சிவராத்திரிக்காக செவ்வாயன்றும் பாடசாலைகளுக்கு விடுமுறை

### தனியார் கல்வி நிலையங்களையும் மூடுமாறு வடக்கு ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2
சிவராத்திரி தின சமய வழிபாடுகளை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நலன் கருதி சிவராத்திரி தினத்தின் மறுநாள் அதாவது செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறையை வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அறிவித்துள்ளார்.
இந்தத் தகவலை வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.
இந்துக்களின் முக்கிய விரதமான சிவராத்திரி நாளைமறு >> 19

## கோணேஸ்வரத்தில் சிவலிங்கம் உடைக்கப்பட்டதால் பதற்றம்!



திருகோணமலை, மார்ச் 2
சிவராத்திரியை முன்னிட்டு, திருகோணமலை திருக்கோணேஸ் வரம் கோயிலுக்கு செல்லும் வழியில் கோயில் நிர்வாகத்தினர் சிவலிங்கமொன்றை நேற்றுமுன்தினம் நிறுவினர். நேற்றுக் காலை குறித்த சிவலிங்கம் உடைக்கப் >> 19



## மகிந்த - இந்தியத் தூதர் நேற்றுத் திடீர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 2
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நேற்றுத் திடீர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
விஜயராமவில் >> 19

## ஐ.நா. அமர்விலிருந்து நழுவுகிறது அரசு

கொழும்பு, மார்ச் 2
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு இலங்கையிலிருந்து அரச குழு ஜெனிவாவுக்கு செல்லாது என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தற்போதைய கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.
இது தொடர்பாக அயலுறவுத் துறை அமைச்சு கலந்துரையாடிய பின்னர். >> 19

## பொன்னாலையை அடுத்து செம்மணியில் சிவலிங்கம்

விரிவு பக். -11



## மனிதஉரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும்

### ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கையை வலியுறுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 2
மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார். >> 08

## இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது

### தமிழ்க் கட்சிகளுடன் ரெலோ இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகள் ஒருமித்து எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழ்க் கட்சிகளுடன் ரெலோ ஏற்பாடு செய்துள்ள சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இன்று காலை இடம்பெறவுள்ளது.
இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய >> 08

# இலங்கைக்கு 2 ஆண்டுகள் மேலும் கால அவகாசம்

### வெளியானது வரைவு

கொழும்பு, மார்ச் 2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கும் வகையிலான தீர்மான முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மசி >> 19

### புதிய அரசமைப்பு, ஐ.நா. தீர்மானம்:

# விலாவாரியாக ஆராய கொழும்பில் 5ஆம் திகதி கூடுகின்றது கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 2
புதிய அரசமைப்பு உருவாக்கம், இலங்கை மீதான ஐ.நாவின் புதிய தீர்மானம் ஆகியவை தொடர்பில் விலாவாரியாக ஆராய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு எதிர்வரும் 5ஆம் >> 19

## பதின்மவயதுச் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை

### சந்தேகத்தில் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2
காதலிப்பதாகத் தெரிவித்து 13 மற்றும் 14 வயதுச் சிறுமிகளை பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கியதாகத் தெரிவித்து >> 19

## இந்திய வானோடி அபிநந்தன் நேற்று பாகிஸ்தானால் ஒப்படைக்கப்பட்டார்

புதுடில்லி, மார்ச் 2
பாகிஸ்தானின் எல்லைக்குள் வானூர்தியின் மூலம் அத்துமீறித் தாக்குதல் நடத்த முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்ட இந்திய வானோடி அபிநந்தன் பல்வேறு நேரமாற்றங்களுக்குப் பின்னர் நேற்று இரவு >> 19

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 06 . 1989



உதிர்வு 02 . 03 . 2018

## அன்ரனிதாஸ் அன்ரோறெனின்



நினைவிலும் வருகின்றாய் மகனே– எங்கள்
கனவிலும் வருகின்றாய்
நேரில் வருவாய் என்று பார்த்திருந்தோம் – நீயோ
மௌனித்து எம்மைக் கலங்க வைத்தாய்

பாஷையூரில் பிறந்தாய் – அன்ரோ
பரியோவான் கல்லூரியில் பயின்றாய்
விடலைப் பருவமதில் எமைப் பிரிந்தாய்
தாங்க முடியவில்லை புத்திரசோகம்
ஓராண்டு நினைவேந்தலில்
இறையோனை வேண்டுகின்றோம் மகனே
உன் ஆன்ம சாந்திக்காக எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் எம்மை
விட்டு அகலாது உன் பாசம்

**என்றும் உன் நினைவுகளுடன்**

**அப்பா, அம்மா, தம்பி, தங்கை,**
**உறவினர், நண்பர்கள்.**

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்)

பிறப்பு 03.03.1958

இறப்பு 20.02.2009

திதி:- அபரபட்ச ஏகாதசி

பத்தாண்டின் முன்
பரந்தாமன் புகழ் தினத்தில்
பரமனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தந்தையின்
பாதம் பணிந்து
அஞ்சலிக்கின்றோம்!

"திருவதிகை"
வேளவை, அளவெட்டி.

அன்புடன்
**பிள்ளைகள்.**

(CS/23657) (11,17)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 04 . 1947



இறப்பு 26 . 02 . 2019

## திருமதி ஞானேஸ்வரி (ஞானம்) கேதீஸ்வரன்

அளவெட்டி (ஆயிலடியை) பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி (ஞானம்) கேதீஸ்வரன் 26.02.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் (சோமு) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கேதீஸ்வரனின் அன்பு மனைவியும், கௌரியின் (France) அன்புத் தாயும், பாலகுமாரின் (France) மாமியும், சௌமியாவின் (France) அன்புப் பேர்த்தியும், மாணிக்கவாசகர் (Canada), தெய்வநாயகி (France) ஆகியோரின் மைத்துனியும் அருந்தவமலர் (Canada), காலஞ்சென்ற பலாசுப்பிரமணியம் (France) ஆகியோரின் சகலியும், சுரேசன், நரேசன், ரமேசன், சுதர்சன் (Canada) ஆகியோரின் சிறியதாயும், பாலினி, பாரதி, பிரபாகரன் (France) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பாலசுப்பிரமணியம் தெய்வநாயகி குடும்பம்** (France).
**கேதீஸ்வரன் (கணவர்).**

**சங்குவேலி தெற்கு.**
**மானிப்பாய்.**

(cs 23669)

**077 558 2797**

# இதய காணிக்கை

சேர்வு 02 . 04 . 1933



பிரிவு 26 . 02 . 2019

## Retired Professor M.Sivasuriya

MBBS (Cey),FRCS (Eng),FRCS (Edin), FRCS (Glasg), FACS FRCOG (Gt,Brit), FCOG (SL), Hon.Dsc. (Jaffna) Former Chancellor and founder Professor of obstetrics and Gynaecology, Department Of obstetrics and Gynaecology Faculty of medicine, University of Jaffna.

## அமரர் மயில்வாகனம் சிவசூரியா

பேராசானே, வைத்திய கலாநிதியே!
யாழ்.பல்கலைக்கழகத்தின் வேந்தரே!
ஆங்கு மகப்பேற்று அறிவியலில் அலகை நிறுவினீரே
அறிவறிந்த ஆளணியை அவனிக்கு அளித்தீரே
விக்டோரியா கல்லூரியை வடக்கிற்கு உவந்தாரே
கனகரத்தின முதலியார் வழித்தோன்றற் பீட்டனே
கனகமகனாம் முகாமைச் செல்லப்பாவின் பேரனே
கல்லூரி வளர்ச்சியிற் கண்ணாய் இருந்தவரே
தேவைகளை உணர்ந்து பொருத்தமுடன் ஆற்றினீரே
காலத்தால் இயற்கையுடன் இரண்டறக் கலந்தவரே
பிரிவின் துயருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையாகிறதே

**ஆத்மசாந்திக்காய் கல்லூரி அன்னையின் தாழ் பணிகின்றோம்**

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்**

(NE/971)(11,17)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFAN
### ADMISSION - 2020 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2020

01. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 05.03.2019 முதல் 18.03.2019 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
   இ.விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 18.03.2019 திங்கட்கிழமை அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. தரம் 01 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒரு படிவத்துக்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000.00
5. வயதெல்லைகள்:-
   அ.தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2014 இற்கும் 31.01.2015 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ.தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2011 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2009 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
6. தரம் 12 ( A/L 2022 Batch ) விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
7. தரம் 04. தரம் 06. தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 12.10.2019 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:-**

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப் படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. தரம் 12 இற்கும் ( A/L 2022 Batch ) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம். கணிதம். வர்த்தகம்) தமிழ்மொழி மூலம் (விஞ்ஞானம். கணிதம். வர்த்தகம். கலை. தொழினுட்பவியல்) மற்றும் London A/L 2020/ 2021 இற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 04.01.2020 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2020 திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கைநெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L தமிழ் / ஆங்கில மொழி மூலம் 2022 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

**- அதிபர்கள் -**

(IN/9114)(11,17)

### மணமகன் தேவை

1988 ஆம் ஆண்டு இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த 8இல் செவ்வாய். ஆயிலியம் 2ஆம் பாதம் உடைய அரச எழுதுவினைஞராகக் கடமைபுரியும் மணமகளுக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். மணமகன் அரச பதவி வகிப்பவராக இருப்பதுடன 3-4 வயது வித்தியாசமாகவும். பாவம் 80-100 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் அவசியமாகும்.

**குறிப்பு:-** மணமகன் பட்டதாரி ஆசிரியர். வங்கி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

**077 913 0082** (ACH/559)(11,17)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1¼ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ உயர். அரச வங்கியில் வேலை செய்து 1971 ஆம் ஆண்டு பிறந்தவருக்கு மாதம் 72,000/= ஓய்வூதியம் பெறுபவருக்கு மணமகள் தேவை.
அரச உத்தியோகம் செய்பவர் விரும்பத்தக்கது.


**076 884 3551**

# இருப்பு அகற்றல்

அதிரடி விலைக்கழிவு
1.3.2019 தொடக்கம்
5.3.2019 வரை

35 % முதல் 50 % வரை

**குளியலறை மாபிள்கள் (சுவர் மற்றும் நிலம்)**
**மற்றும் குளியலறை சாதனங்கள்**
**கையிருப்பு உள்ளவரை**



**HOUSE OF CERAMIC K.K.S. ROAD, JAFFNA.**
**(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)**

# மரண அறிவித்தல்



## இராசதுரை அன்னரத்தினம்

**தோற்றம்: 13.03.1924 மறைவு: 27.02.2019**

இணுவில் கிழக்கு வேம்போலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை அன்னரத்தினம் கடந்த 27.02.2019 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இணுவில் கிழக்கு செல்லத்துரை பூரணம் தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நவாலி வடக்கு நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசதுரையின் அன்பு மனைவியும் விஜியரத்தினம் (SVM), செல்வராஜா (வேபி), காலஞ்சென்ற அரியரத்தினம் (ஹட்டன்), யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜெயமலர் (மஞ்சத்தடி), இந்திராதேவி (இணுவில் வேம்போலை), ஸ்ரீகாந்தன் (ஹட்டன்), ஸ்ரீசிவசண்முகராசா (கனடா) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற சத்தியதேவி, மகாலட்சுமி, கலாவதி, றஞ்சனேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற கணேஸ், சிவராசலிங்கம், ரதிகலா, ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமியும் ஜெயந்தன், அகிலன், தீபா, கோபிநாத், சியாமளன், சுரேஷ்சனா, ஜீவிதா, சபிதா, இந்துஷன், ரதீனா, ரதீபன், அமிர்தா, உமாசுதன், தர்மிகா, பிரார்த்தனா, இன்பசுதன், எழிலரசி, கார்த்திகா, கோபிகா, விஷ்ணுகா, உஷாந்தி, சஞ்ஜீவிகா, சதுர்சன், சுபேக்கா, நிரோசன், நிலைக்சன், நிதர்சன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிஷன், அக்ஷயா, ஹர்ஷிவிகா, திஷிகா, குஷிகா, பதுமிலன், ஹஸ்வினி, தேனுஜன், கரீஷ்மன், நேத்ரன், சஷ்மிகா, அபிமன், அனிஸ், சிந்து, சயன், சயூரி, கபிஷன், சதுர்ஷன், பைரவி, தக்ஷாயினி, தக்ஷிதன், மிதுமிதா, லயா, அஞ்சனா, அக்ஷரா, வைஷாலி, நிசாலி ஆகியோரின் பூட்டியும், நேசமணி (மன்னார்), காலஞ்சென்றவர்களான அழகரத்தினம், ராசேந்திரம் மற்றும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- யோகேஸ்வரன் - 076 2610154
சிவராசலிங்கம் - 077 1975168

(cs.23694)

தகவல்
இ.யோகேஸ்வரன்

## நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்

# மகா சிவராத்திரி – 2019

மகா சிவராத்திரி தினத்தன்று (04.03.2019) ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெறுவதோடு 03 ஆம் திகதி காலை 6.30 மணியிலிருந்து 04 ஆம் திகதி மாலை 6.00 மணி வரை பக்தர்கள் தங்கள் கரங்களால் 108 சிவலிங்கங்களுக்கும் அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


**கண்டி வீதி, நாவற்குழி**
**தொலைபேசி : 021 221 4330**
**Sivapoomi@gmail.com**

**சிவபூமி திருவாசக அரண்மனை,**
**சிவபூமி அறக்கட்டளை.**

(CS 23688) (14.17)

---

## விண்ணோடு கலந்து இன்று அகவை பத்தொன்பது



**அமரர் முருகேசு நடராஜலிங்கம்**
(ஓய்வுபெற்ற இ.மி.ச. உத்தியோகத்தரும், "இந்திர தீபம்" உரிமையாளரும்)

உதயத்தில் 19.12.1944
இதயத்தில் 01.03.2000

**திதி: அபரபக்க ஏகாதசி**

நாம் எல்லாம் நலம் வாழ நாடி நின்ற அன்பு உள்ளமே
கண்ணீரில் கரைந்து ஆண்டுகள் பத்தொன்பது ஆனதுவோ
அழியாத நினைவுடன் அன்பாகப் பார்க்கின்ற
அந்தப் பூ முகம்தான் எம்மை விட்டு அகன்றிடுமோ
எம் அனைவர் உள்ளங்களிலும் அணையாத தீபமாய்
விளங்கிடும் நீங்கள் விண்ணகவாழ்விலும் விடியலாய்ப்
பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கும்

முகவரி:
**நீலர்வளவு,**
**தும்பளை.**

என்றும் அன்புடன்
**தி.பிருந்தயன்,**
**தி.கபிசாயினி,**
**தி.டினோத்யன்.**

அன்பு உள்ளங்கள்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

---

## உடன் விற்பனைக்குண்டு

- Ownership, Non Vesting, Street Line Certificate, Assessment Tax ஆகியவற்றுடன் இல.86, பிரதான வீதி (A9), யாழ்ப்பாணத்தில் நல்ல குடிதண்ணீர், மின் சார வசதியுடன் கூடிய சிறிய வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.
- அனோமா சீட் போட்ட 16'x16' (Car Shed) கொட்டகை.
- A-40, Austin - 10, V.W (Open hood) கார்கள் என்பன வும் உடன் விற்பனைக்குண்டு. (CS/23647)(11.17)

**071 138 0821 - Viber/ IMO**
**076 881 5004 (Benz)**

---

## காணி விற்பனைக்கு உண்டு

கந்தரோடையில் உடுவில் வீதியில் உள்ள சின்னக்குளம் முன்பாக நிலப்பரப்பு 6 விஸ்தீரணம் கொண்ட வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. (CS 23684) (14.17)

**071 069 0143/077 155 6859**

---

## விற்பனைக்கு உண்டு

நல்லின மொட்டை சணல் பால் ஆடு, ஒரு மாத வயதுடைய மறி குட்டியுடனும், Pomareniyan, Dashound பெண் நாயும் விற்பனைக்குண்டு.

**021 225 5059**

---

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

சோமசுந்தரம் அவனியூ, இலக்கம் 38இல் 1¾ பரப்பில் 4 அறை கொண்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு. சென்ஜோன்ஸ் கல்லூரி. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. பொஸ்கோ பாடசாலை மற்றும் கச்சேரி என்பவற்றுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ளது.

**077 327 3125** (CS/23654) (11.17)

---

## பெயர் மாற்றம்

குமாரசாமி வீதி. புத்தூர் கிழக்கு புத்தூர் எனும் விலாசத்தை சேர்ந்த **நாகேந்திரா** எனும் எனது பெயரை **நாகேந்திரன்** என பெயர் மாற்றி இனி வரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**நாகேந்திரன்.**

(CS 23689) (14.17)

---

## மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பொதுச்சபை உறுப்பினர்களுக்கான விஷேட பொதுக்கூட்ட அழைப்பு 2019

**தலைவர் - ந.தனபாலசிங்கம் அவர்கள்**
**காலம் - 17.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் - காலை 9.00 மணி**
**இடம் - விநாயகர் மணிமண்டபம்**

நிகழ்ச்சி நிரல்:-
- இறைவணக்கம்
- தலைமையுரை
- மகோற்சவ எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனை.
- விஷே உற்சவம் தொடர்பான ஆலோசனை
- கணக்கறிக்கைத் திருத்தம் சமர்ப்பித்தல் 01.06.2019 - 30.04.2018வரை
- நன்றியுரை.

**செயலாளர் - ம.மதிவாணன்**
**வெள்ளைப்புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை, மண்கும்பான்.**

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 03.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2017 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு அணிகளை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர் களை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங் கிற்கு தவறாது வருகைதருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(IN/9515)(11.17)

---

**2019.02.15 இன் பத்திரிகை விளம்பரத்தின் திருத்தம்**
**வவுனியா வடக்கு பிரதேச சபை- நெடுங்கேணி**
**அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019**

கடந்த 2019.02.15 திகதிய பத்திரிகையின் எமது சபையின் வெற்றிடம் நிரப்பல் தொடர்பாக கோரப்பட்ட விளம்பரத்தில் சாரதிகளுக்கான தொழிற்தகைமை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

**சாரதி பதவிக்கு தொழில்சார்ந்த தகைமைகள்**

(இத்தகைமைகள் யாவும் நேர்முகப்பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும்)

1. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப் படுகின்ற 24 அந்தருக்கு (CWT) குறையாத ஸ்ரேசன் வெகன் வண்டிகளை மற்றும் தனிப்பட்ட / வாடகைக் காரினைச் செலுத்து வதற்கான செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் மற்றும் பாரவூர்தி செலுத்த கூடிய வாகன ஓட்டுனர் அனுமதி பத்திரத்தை யும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தின் முடிவுத் திகதிக்கு குறைந்தபட்சம் 03 வருடங்களுக்கு முன்னர் புதிய நடைமுறையின் கீழ் வாகன வகுப்பு A,B1,C ஆகியவற்றினைச் செலுத்துவதற்குரிய வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

02.03.2019 வரை இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க தேவையில்லை என்பதுடன் தகைமை இருப்பின் நேர்முகபரீட்சையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பமுடிவுத்திகதியானது 2019.04.01வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் ஏனைய விபரங்கள் அதே நடைமுறையில் இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தவறுக்கு மனம் வருந்துகின்றோம்.

**தவிசாளர்**
**வவுனியா வடக்கு பிரதேச சபை**
**நெடுங்கேணி**

(CS 23586) (14.17)

---

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை - 2019/2020

1. தலைவர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள அலுவலகங்களுக்கு சுத்திகரிப்பு சேவை. பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திர-ங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/02/CS/2019 | சுத்திகரிப்பு சேவை | 20,000.00 |
| 02. | NP/30/02/02/SS/2019 | பாதுகாப்பு சேவை | 20,000.00 |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a)கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b)அத்துடன், பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   c)அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை ஆணையாளர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் . மீனாட்சிஅம்மன் வீதி. பண்ணை.யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் . மீனாட்சிஅமமன் வீதி. பண்ணை. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 05.03..2019 ஆம் திகதி தொடக்கம் 18 .03.2019 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.1000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்வி ஆவணங்கள் 19.03.2019 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக ஆணையாளர். வட மாகாண நன் னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் . மீனாட்சி அம்மன் வீதி. பண்ணை. யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர் களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. சகல கேள்விகளுடனும் ரூபா. 20.000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103**

(CS 23586) (14.17)

---

## 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 10 . 1937
மறைவு 13 . 02 . 1988



**அமரர் தி.சி.சண்முகலிங்கம்**
(இணுவில் கிழக்கு)

**திதி: அபரபக்க ஏகாதசி (02.03.2019)**

கலை மலியும் பூமியாம் இணுவையிலே - என்றும்
விலையிலா நற்சேவையாளராய் திகழ்ந்த எந்தையே!
மலை சாய்ததென உம் பிரிவு எமை வாட்டிற்று - அது
நிலையிலா மனித வாழ்வு தத்துவத்தை செப்பிற்று

துன்பநிலை தேற்ற மன உறுதி ஆக்க
இன்பநிலை - கல்வி கருவியால் தூக்க
வண்மை புகழ் பரப்பி யாம் வாழ்ந்தாலும்
அன்பின் தந்தை இல்லையே! தவிக்கின்றோம் - நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனை பிரார்த்திக்கின்றோம்.

'சுகந்தம்'
இணுவில் கிழக்கு,
இணுவில்.

அன்பான மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திகள்,
சுற்றத்தார்கள்.

(CS.14685) (13.17)

# கண்ணீர் அஞ்சலி

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி லெட்சுமி தேவராஜ் அவர்களின் அன்புத் தந்தையார்

## நடராசா இராசபாதம்



மலர்வு 19-07-1959 — உதிர்வு 26-02-2019

அன்பாலே அரவணைத்து
ஆளுமையின் வழிநடந்து
இன்முகத்தால் உள்ளமெல்லாம்
இடம்பிடித்தீர் இன்று ஒளியிழந்து
தவிக்கின்றோம்,

பிரிவால் துயருறும்
பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்
தெல்லிப்பளை

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021493 1111
உதயன்

# நீங்கா நினைவுடன் பத்தாவது ஆண்டில்....

அமரர்
## இலட்சுமணபிள்ளை கிருபாகரன்
(ஆசிரியர் - கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17.09.1964 | 20.02.2009 |

பகை கொண்டு மேகம் எறிகணை மழை பொழிந்த கதை
மறந்திட முடியாது மறுத்திடவும் முடியாது
நிறுத்தாது சுழலுகின்ற நீண்ட இப்புவிதனில்
உயிருள்ள வரை உள்ளக் குமுறலுடன்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன் : **மனைவி, பிள்ளைகள்.**

# மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பொருள் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரம்

மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதால் அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது.

**மொந்தன் வாழை, கதலி வாழை, கச்சான், இஞ்சி**

***நியந்தனைகள்***

பயிர் : வாழை
இனம் : மொந்தன், கதலி
குட்டிவகை : வால் குட்டியாக இருத்தல் வேண்டும்.
உயரம் : 2.5 அடி தொடக்கம் 3.0 அடி உயரம் உள்ளதாக இருக்க வேண்டும்.
இலைகளின் எண்ணிக்கை : சராசரியாக 5 - 6 இலைகளை கொண்டிருக்க வேண்டும். நோய் பீடைத்தாக்கமற்ற வீரியமான நடுகைக்கு உகந்த குட்டியாக இருத்தல் வேண்டும்.

| Crop | Seed Class |
|---|---|
| Ground nut | Breeder/Foundation/ Registered |
| | Certified/ Commercial |
| | Commercial 11 |

பயிர் : இஞ்சி
இனம் : ரங்கூன்

- தண்டு கிழங்காக இருத்தல் வேண்டும். நோய்தொற்று இல்லாததாக இருத்தல் வேண்டும்.
  நன்கு முதிர்ச்சி அடைந்ததாக இருத்தல் வேண்டும்.
- இனம் தெளிவாக வேறுபிரித்து அறியக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- கலப்பினம் இருத்தல் கூடாது.
- தூய்மை 100% இருத்தல் வேண்டும்.

***நியந்தனைகள்***

1. கொள்வனவுக்கான கூறுவிலைகள் அனைத்தும் மூடிய கூறுவிலைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கொள்வனவுக்கான பொருள்கள் அதில் குறிப்பிட்ட விவரக் குறிப்புக்களுக்கு அமைவாக (Specification) முழுமையான விவரங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
3. மேற்படி கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் 2019.03.15 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பிந்திய கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப்பத்திர உறைகள் 2019.03.15 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கேள்வி கேட்பவர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
4. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு உறையிலிட்டு உறையின் இடதுபக்க மூலையில் வழங்கப்படும் பொருளின் விவரம் குறிப்பிடல் வேண்டும்.
5. இவ் கேள்விப்பத்திரமானது 2019.03.15 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளருக்கு கிடைக்கத்தக்கதாக பொது முகாமையாளர், மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம். A35. பரந்தன் பிரதான வீதி, கைவேலி புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப்பத் திரத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள்**
**தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்**

(AKN 567) (14.17)

# சௌள உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் மங்கள மிகு விளம்பி வருடம் மாசி 19 ஆம் நாள் (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய காலை 08 மணி 02 நிமிடம் முதல் 09 மணி 12 நிமிடம் வரை வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் எமது சிரேஷ்ஜ புதல்வன்

## சிரஞ்ஜீவி மிதுர்சன சர்மா

**அவர்களுக்கு ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் சௌள உபநயன பிரம்மோபதேசம்** செய்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமரனை ஆசிர்வதித்து அதிகாலை உணவு விருந்துபசாரத்திலும் கலந்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்**
**ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.**
**077 740 1714**

தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ பா.பாலச்சந்திரசர்மா
ஸ்ரீமதி சர்வேஸ்வரி தம்பதிகள்.

(AKN/665)(11,17)

# 90 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

90 YEARS HAPPY BIRTHDAY

## 02.03.2019



## திருமதி அருளம்மா இராசநாயகம்

மண்ணில் வந்துதித்த இந்நிலவுக்கு
இன்று அகவை தொண்ணூறு

அன்போடு அமுதூட்டி
அகமகிழ்ந்து அரவணைத்து
எண்ணிலாக் கதைகள் சொல்லி
எமை வளர்த்து ஆளாக்கிய தாயே!
நீங்கள் இன்று போல் என்றும்
நூற்றாண்டு காலம் இனிதாய் வாழ
இறைவனை வேண்டுகிறோம்
தாயே!

வாழ்த்த எமக்கு வயது போதாது
தாயே!

வாழ்க நீருழி வாழிய பல்லாண்டு.

அன்புடன் வாழ்த்துவோர்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானாம்பிகை கனகசபை



தோற்றம் 14.06.1940 — மறைவு 23.02.2019

யாழ்.நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை கனகசபை 23.02.2019 சனிக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பகவதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா கனகசபையின் அன்பு மனைவியும், ஸ்ரீதரனின் அன்புத் தாயாரும், ஜெயந்தியின் பாசமிகு மாமியாரும், ராம்கிஷன், சௌமியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ் சென்ற நேசமலர் மற்றும் புஸ்பராணி (பிரான்ஸ்), கதிர்காம நாதன் (கனடா), புனிதவதி (சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வனஜா கனகரட்ணத்தின் வளர்ப்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றையதினம் அவரது சகோதரி புனிதவதியின் இல்லத்தில் (சாரதா வீதி, சங்கத்தானை) துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- மகன்-P.K.ஸ்ரீதரன்- 416 2710774,**
**சகோதரன் - மாணிக்கம் கதிர்காமநாதன் - 416 602 7405**


(CS/23677) (11,17)



## கிட்டிப்புள்

கிட்டிப் புள்ளு என்பது தமிழரின் பழமையான ஒரு விளையாட்டு ஆகும். கிட்டிப் புள்ளு சிறுவர்கள் ஆடும் ஒரு விளையாட்டு.
கிட்டிப்புள், கிட்டிக்கோல் ஆகியவை இந்த விளையாட்டுக்குப் பயன் படும் கருவிகள். கிட்டிப்புள் சுமார் மூன்றுவிரல் பருமனில் 20 சென்ரிமீற்றர் நீளம் கொண்டது. கீந்துகுழி ஆட்டத்துக்கு அதன் இரு முனைகளும் கூராக இருக்கும். அடிகோல் ஆட்டத்துக்கு முனைக்கூர் இருக்காது
கிட்டிக்கோல் ஒருவிரல் அல்லது இருவிரல் பருமனும் சுமார் 50 சென்ரிமீற்றர் நீளமும் கொண்டது.
முதல் வகையான கிட்டிப்புள்ளு விளையாட்டு தமிழகத்தின் பெரும் பாலான மாவட்டங்களில், இலங்கையிலும் காணப்படுகின்றது.
இதற்கு ஒரு முழம் நீளத்துக்கு தரையில் ஒரு ஆழமான குழிக் கோடு ஏற்ப்படுத்த வேண்டும். அந்த குழிக்கோட்டை கீந்து குழி என்று அழைப்பர்.
இந்த விளையாட்டில் இரண்டு அணிகள் உண்டு. ஒரு அணி, புள்ளை குழிக்கோட்டிலிருந்து தண்டிலால்அழுத்தி எதிர் அணியினர் இருக்கும் பக்கம் கீந்த வேண்டும். எதிர் அணியினர் கீந்தியபுள்ளைப் பிடிக்க வேண்டும். எதிர் அணியினர் புள்ளை தரையில் விழுமுன் தவ்விப் பிடித்துவிட்டால், கீந்தியவர் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். கீந்திய புள் தரையில் விழுந்த பின்னரே, எதிர் அணியினர் அந்த புள்ளை கையில் எடுத்தால், அப்புள்ளை திரும்ப கீந்தியவர் கிட்டி அல்லது தாண்டிலை நோக்கி வீசியெறிய வேண்டும். அவ்வாறு வீசுவதற்கு முன்பு கீந்தியவர் கீந்து குழியில் இருந்து பின்னோக்கி இரண்டு தண்டில் நீளம் அளவெடுத்து தரையில் வைக்க வேண்டும்.
எதிர் அணியினர் வீசிய புள் தாண்டிலின் மீது பட்டால் கீந்தியவர் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். அப்படி புள் தாண்டில் மீது படாவிட்டால், கீந்தியவர் தாண்டிலால்
கீந்து குழியில் இருந்து புள்ளை நோக்கி அளப்பார். எத்தனை தாண்டில் நீளம் தொலைவில், எதிர் அணியினர் வீசிய அந்த புள் இருக்கிறதோ அத்தனை புள்ளிகள் கீந்தியவர் அணியைச்சேரும்.
பின் மறுபடியும் அதே ஆட்டக்காரர் கீந்த வேண்டும். இப்படி ஒரு அணியில் உள்ள அனைத்து ஆட்டக்காரர்களும் ஆட்டத்தை விட்டு வெளியேரும் வரை கீந்துவர்.
அனைவரும் வெளியேறிய நிலையில் அந்த அணி எத்தனை புள்ளிகள் எடுத்துள்ளதோ அதுவே அந்த அணியின் மதிப்பு ஆகும். இதே போன்று எதிர் அணியினரும் கீந்துவார்கள்.

## வழிகாட்டுவோம்



## பூனை அண்ணா


எங்கள் வீட்டு பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தை சுத்தப்படுத்தும்
நாற்காலியின் கீழ் படுக்கும்



## மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை மாணிக்கம்

*(ஓய்வுநிலை மாவட்ட இணைப்பாளர் பனை அபிவிருத்தீச் சபை, கிளிநொச்சி, அகில இலங்கை சமாதான நீதவான்)*


மலர்வு 28.12.1946 உதிர்வு 01.03.2019

சிங்கைநகர், புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வல்லை வீதி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கிளிநொச்சி, வவுனியா, கட்டப்பிராய் ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட A.V.K. மாணிக்கம் நேற்று (01.03.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ் சென்றவர்களான ஆசைப்பிள்ளை- பொன்னு இணையரின் பாசமிகு மருமகனும் இராசமலர் (தேவி - ஓய்வு நிலை அதிபர் - கிளி/ திருவையாறு மகா வித்தியார்லயம், கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி மத்திய கல்லூரி) இன் அன்புக் கணவரும் சுதர்சன் (ஜேர்மனி), சுனேதா (ஆசிரியை- பூவரசங் குளம் ம.வி. வவுனியா), சஞ்ஜீவன் (பிரான்ஸ்), விதூசன் (Director - Asian Brodcasting Network (Pvt) Ltd, Dream of Asia (Pvt) Ltd, ஆகியோரின் தந்தையா ரும் பிரதீபா (ஜேர்மனி), காந்தரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அன்னம்மா, சின்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயகுமார் (பொன்ராசா), சிவலிங்கம் (பின்லாந்து), சற்குணவதி, காலஞ்சென்ற குமரேசு ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் வசந்தகுமாரி, பூமலர் (நோர்வே), சுப்பிரமணியம் (ஆதவன்-அரிசிஆலை), யோகராணி (பின்லாந்து), ரதி, சின்னராசா ஆகியோரின் மைத்துனரும் லதூசன், நிருபனா ஆகியோரின் பெரியப்பாவும் நதிஷன், ஜஸ்மிகன் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் விளையாட்டரங்க வீதி, கட்டப்பிராய் இல்லத்தில் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விதுசன் (மகன்) 077 400 1876/ 077 436 3549.**
**சுனேதா (மகள்) 077 280 4787**

**தகவல்: குடும்பத்தினர்.**

## காலநிலை எதிர்வுகூறல்

- பூமியிலும் வானிலும் ஏற்படக் கூடிய மாற்றங்களை முன்னதாகவே மனிதர்களுக்குத் தெரியப்படுத்தல் காலநிலை எதிர்வுகூறுதல் எனப்படும்.
- பூமியிலும் வானிலும் தினம் தினம் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.
- சில வேளைகளில் கடும் வெப்பம் நிலவுகிறது. சில நேரங்களில் பெருமழை பொழிகிறது.
- திடீரென கடும் குளிர் பனிப்பொழிவு, திடீரென கடும் புயற்காற்று வீசுகிறது.
- கடும் வெப்பம் நிலவும் இன்னும் கடற்பெருக்கு, பூகம்பம், சுனாமி போன்றவையும் ஏற்படும்.
- இவையெல்லாம் காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள்
- இவ்வாறு வரப்போகும் காலநிலை மாற்றங்கள் முன்ன தாகவே அறியப்படும் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.
- செய்மதிகள் ராடர்கள், றேடியோ, சவுண்ச் போன்றவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை முன்னதாகவே தெரிந்து கொள்ளலாம்.
- செய்மதிகள், வானிலை மாற்றங்களைப் படம் பிடித்துப் பூமிக்கு அனுப்புகின்றன.
- அவற்றை அடிப்படையாகக் கொண்டே தொலைக்காட்சி, வானொலி என்பவை பத்திரிகைகள் வானிலை எதிர்வு கூறலைச் செய்கின்றன.
- இவற்றைவிட ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் கர்லநிலை அவதான நிலையங்கள் உள்ளன.
- அவையும் அன்றாட வெட்பதட்ப நிலைகளை கணித்துக் கூறுகின்றன.
- இந்த வானிலை எதிர்வுகூறல்கள் மக்களின் நலன் கருதியே தெரிவிக்கப்படுகின்றன.
- ஆதலால் அவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்படுதல் மக்கள் தம் கடமையாகும்.



# இளமையில் முதுமை

"உங்களுக்கு வயதாகிவிட்டது, பழையமாதிரி ஓட, பளுதூக்க வேண்டாம்" என மருத்துவரோ, நண்பர்களோ சொல்லி அதை நாம் கேட்டால் அது நமக்கு நாமே விதித்துக்கொள்ளும் சாவுத்தண்டனைக்குச் சமம்.

வயதாவது என்பதன் விரிவுரை என்பது "ஒரு குறிப்பிட்ட வயதை தொட்டபின் நாம் முதியவர்கள், அந்த வயதை தொடாதவரை இளையவர்கள்" என்பது அல்ல.

"இளமையில் வறுமை" மிக கொடியது என்பாள் அவ்வை. ஆனால் அதைவிட கொடியது "இளமையில் வரும் முதுமை"

வயது ஆவது என்பது ஒரு குறிப்பிட்ட வயதை தொடுவதோ, பேரனோ, பேத்தியோ வருவது, ஓய்வு பெறுவது, நரை,திரை, வழுக்கை இவை எல்லாம் அல்ல. இவை எல்லாம் வாழ்க்கையில் நடக்கும் இயல்பான மாற்றங்கள். வயதாவதன் அறிகுறி அல்ல.

10 வயதில் முதுமையும் அடையலாம். 80 வயதில் 20 வயதினரை விட இளமையுடனும் இருக்கலாம். நமக்கு உண்மையில் எப்போது வயது ஆகிறது?

வளர்ச்சி இருக்கும்வரை நாம் இளைஞர்கள்தான். வளர்ச்சிநின்றால்முதியவர்கள். தினமும் புதியதாகக் கற்றுக்கொள்ளும் வரை வளர்ந்துகொண்டே இருக்கிறோம் என்றே பொருள். நம் மூளை செல்கள் வளர்கின்றன. உடல்பயிற்சி செய்வதால் நம் தசைகள் வளர்கின்றன. உடல் வலுவாகிறது.

ஆக மூளையும், உடலும் வளரும் 75 வயது பெரியவரை நாம் இளைஞர் என தான் அழைக்கமுடியும்.

ஆக இளமையும் முதுமையும் அவரவர் உடல் மற்றும் மனவலுவால் தீர்மானம் ஆகிறதே ஒழிய ஆண்டுகளால் தீர்மானம் ஆவதில்லை.

அதனால் உங்கள் வயது எதுவாக இருப்பினும் நீங்கள் செய்ய முடியாத காரியம், எட்டமுடியாத உயரம் என எதுவுமில்லை.

அந்த நம்பிக்கை இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் இளைஞர்தான்.


உங்கள் வயது என்ன என்பது உங்கள் கையில் இல்லை.

ஆனால் நீங்கள் இளைஞரா, முதியவரா என்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.




## மரண அறிவித்தல்

### பசுபதி தேவரஞ்சன் (ரஞ்சன்)



காரைநகர் மருதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி தேவரஞ்சன் (ரஞ்சன்) 27.02.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பத்தினி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் வலன்ரீனா, பகீரன், நிஷந்தனா, நிரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நிமல்ராஜ், நளாயினி (ஆசிரியர் அராலி இந்துக் கல்லூரி), அரியவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவபாலன், அருட்திரு தேவராஜன் (A.C.M. திருச்சபை ஊழியன்), தேவமனோகரி, அருட்திரு தேவமித்திரன் . தேவதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிறிஷ்ரின் றொஷானி, டெபோராலக்ஷானி, டனோஷன், தர்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.03.2019) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் வழிபாடு இடம்பெற்று சாம்பலோடை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 684 5427.
076 868 9663.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 23705/15/18)

## மரண அறிவித்தல்

### திருமதி நிர்மலா தியாகராஜா



அரியாலையைப் பி றப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலா தியாகராஜா கடந்த (27.02.2019) புதன்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

No. 113, சந்தனமாதா ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### ஜோன்சன் புளோறா

*(முன்னாள் J.M.B.C.S. கிளை முகாமையாளர்)*



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன்சன் புளோறா கடந்த 23.02.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - கிளாறம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஜோன்சனின் அன்பு மனைவியும் லக்ஷன், காலஞ்சென்ற ஜெலான் ஆகியோரின் அன்புத் தாயாரும் மற்றில்டா (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான கில்டா (கனடா), ஆல்பிறட் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி ஷெலீனாவின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி இன்று (02.03.2019) முற்பகல் 10.00 மணியளவில் (பிரான்ஸ் நேரம்) Saint Jean Baptista De Grenella (பிரான்ஸ்) தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக நண்பகல் 12.00 மணிக்கு Cimetiera De Bagneux எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


195/A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: சகோதரி மேற்றில்டா

(சகோதரி) மெற்றில்டா 076 603 0478, 077 669 1298,
(மகன்) லக் ஷன் 0033 621 331743

## மரண அறிவித்தல்

### செல்லர் கனகரத்தினம்



பிறப்பு 25.07.1938 | இறப்பு 01.03.2019

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் கனகரத்தினம் நேற்று (01.03.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் கண்மணி - தம்பதிகளின் அன்பு புதல்வனும் தேவமலரின் (தேவா) அன்புகணவரும் ஜோர்ஜ்ராஜன் (கொலண்ட்), ஜோகநிர்மலா (கொலண்ட்), கௌசலா, சசிகலா ஆகியோரின் அன்பு தந்தையும் ராஜ கருணாகரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 892 1493

தகவல்: குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் இரத்தினராசா பெஞ்சமின் இராஜரட்ணம்

*ஓராண்டு காலம்*
*ஓடி மறைந்ததோ!*
*ஈரவிழி காயவில்லை*
*எங்கள் தெய்வமே!*
*வராதோ அக்காலம்*
*என்று ஏங்கி*
*தீராத கவலையுடன்*
*தேம்பித் தேம்பி நின்று*
*சீராத சிரார்த்தம் அதை*
*செய்து இன்று*
*வேரான உமக்கு சாந்தி*
*வேண்டுகின்றோம்.*




தோற்றம் 25.06.1947 | மறைவு 13.03.2018

லக்சுமிவாசா
மீசாலை மேற்கு, மீசாலை

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை யோகநாதன்



பிறப்பு 11.05.1945 | இறப்பு 28.02.2019

வேலணையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் திருநாவற்குளம் வவுனியாவை தற்கால வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை யோகநாதன் கடந்த (28.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யோகவதனி, சுமதி, ஜெனார்த்தனன், காலஞ்சென்றஜெயந்தன் மற்றும் யசோ ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை இல.446, 3ஆம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியாவில் உள்ள இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 952 2546, 077 081 1184

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 932
சீட்டிழுப்பு திகதி 2019.02.28 வியாழக்கிழமை
E 05 17 46 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,845,560/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## மனித...

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40ஆவது அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்



போதே, உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பியோனாலா நி ஆலோன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை தடுப்பதும் அதனை மறுபரிசீலனை செய்வதற்கான அரசின் உறுதிப்பாடு மற்றும் புதிய சட்டத்தை கொண்டுவரும் முயற்சிகளை அவர் வரவேற்றார். இலங்கை அரசுடன் தனது அலுவலகத்தின் தற்போதைய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும், இலங்கையின் முயற்சிகளுக்கு தனது தொழில்நுட்ப உதவியையும் வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ,5)

## இலங்கைக்கு கால....

கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5,26)


## கட்டளைக்காக...

தீர்ப்புக் கட்டளைக்காக தவணையிடப்பட்டுள்ளது. (ஓ,5,56)


### 60ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

2019.03.02

இன்று
தனது 60 ஆவது பிறந்தநாளை
கொண்டாடும்
**பொன்னையா ஆனந்தராசா**
(02 ஆம் பகுதி,
அனிஞ்சியன்குளம், மல்லாவி)
அவர்களை
பல்லாண்டு காலம் சீரும்
சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் :
நேசமலர் [மனைவி],
பிள்ளைகள் தர்சினி, றேகன், நிஷாந்தன், சுதர்சினி,
பேரப்பிள்ளைகள் – பிறைசி, யெஷீரன், டயானா, சகானா, சகோதரர்கள்.

### காணவில்லை

காதில் இலக்கம் உள்ள கொம்பில் கயிற்றுடன் மா வெள்ளை, பட்டிக்கொம்பு, நெற்றியில் வெள்ளை பொட்டு, கட்டையானது கன்று ஈனும் நிலையில் உள்ள பசு கடந்த 24.02.2019 இருந்து காணவில்லை. கண்டவர்கள், தகவல் ஏதும் தெரிந்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 991 0953, 076 924 0692, 077 078 2270

### வேலையாள்கள் தேவை

01. நன்கு அனுபவம் உள்ள மின் இணைப்பாளர் (மூன்று நிலை வயரிங் வேலை தெரிந்தவர் 3 Phase)
02. பிளமிங் வேலை அனுபவம் உள்ளவர்கள்
03. வெல்டிங் வேலை அனுபவம் உள்ளவர்கள்.

**தொடர்பு - 075 918 3940**
(திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)

### ENTERTAINMENT

BRIE LARSON SAMUEL L. JACKSON BEN MENDELSOHN DJIMON HOUNSOU LEE PACE LASHANA LYNCH GEMMA CHAN WITH ANNETTE BENING WITH CLARK GREGG AND JUDE LAW

நாடெங்கிலும் உள்ள 3D
திரையரங்குகளில் முதன் முறையாக



MARVEL STUDIOS
கேப்டன் மார்வல்
திரைப்படத்தை தமிழில் கண்டு மகிழுங்கள்
இது ஒரு EAP FILMS & THEATRES விநியோகம்
மார்ச் 8 முதல்

| | | | | |
|---|---|---|---|---|
| கொன்கோர்ட் 3D தெஹிவல | சமந்தா 3D தெமட்டகொட | சினி வேர்ல்ட் 3D கொழும்பு | ரூபி 3D கொழும்பு | தினுசா 3D நாவலப்பிட்டி |
| ராஜா 3D யாழ்ப்பாணம் | சுகந்தி 3D மட்டக்களப்பு | சாரு சினிமா 3D பருத்தித்துறை | G.K. 3D கல்முனை | நெல்சன் 3D திருகோணமலை |

For Cinema Advertising: 0770 366 571, 0770 464 751, 0770 480 669
PRESENTED BY EAP FILMS & THEATRES
Online Booking: www.eapmovies.com
EAP Films & Theatres Ltd EAPcinemas
SAVOY

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 413
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.01
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 115,255,238/-
E 08 48 63 64

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 541
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2019.03.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,943,030/-
வெற்றி இலக்கங்கள் 41 58 60 72 Q

ராசி அதிர்ஷ்டம்
திகதி 01.03.2019 வெற்றி வாரம் 2468 வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 18 38 47 51
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,796,310/=

நியத ஜய
சீட்டிழுப்பு வாரம் : 750 வர்ணம் : நீலம்
திகதி : 2019.03.01
24 33 40 43 B
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 22,831,836/-

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**கங்காதேவி கனகலிங்கம்**



காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் தங்கோடை வாரிவளவு, காரைநகரை வசிப்பிடமாகவும் பின்னர் திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் பின்னர் இல. 384/3, மன்னார் வீதி, வேப்பங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கங்காதேவி கனகலிங்கம் அவர்கள் (01.02.2019) அன்று இறைபாதம் அடைந்த செய்திஅறிந்தவுடன் நேரில் வந்து எமது துயரத்தில் பங்குகொண்டு பல்வேறு உதவிகளை வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் மலரஞ்சலி, துண்டுப்பிரசுரம் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். 03.03.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் பின்னர் வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# விக்ரோறியா கல்லூரியின் இணையத்தளம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2
யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரியின் புதிய இணையத்தளம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் திருமதி.ச.சிவகுமார் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது கல்லூரியின் 2000 ஆண்டு உயர்தர மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் www.victoriacollege.lk எனும் இணையத்தள முகவரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி.இந்திரா தவநாயகம் கலந்துகொண்டு இணையத்தளத்தை அரம்பித்து வைத்தார். வெளியீட்டுரையினை கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தற்போதைய விரிவுரையாளருமான விக்ரோறியன் அ.சேந்தன் நிகழ்த்தினார். (ஐ)

# மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி

கொடிகாமம், மார்ச் 2
வரணி திம்புருவில் வாய்க்கால் சீரமைப்பதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் வரணி மத்திய கல்லூரியில் அண்மையில் சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்கள பெரும்போக அலுவலகர் ஆர்.எஸ்.சுகந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கமநல அபிவிருத்தி திணைக்கள தொழில்நுட்ப அலுவலகர் பிரிவுக்குரிய கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், வரணி, இயற்றாலை, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி ஆகிய கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச விவசாயிகள், கிராம மட்ட அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் திம்புருவில் வாய்க்கால் சீரமைப்பது தொடர்பான விளக்கங்கள் அதிகாரிகளால் வழங்கப்பட்டதோடு சீரமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் விவசாயிகளின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

விவசாயிகளின் ஆலோசனைகள் மற்றும் வேண்டுகோளுக்கு இணாங்க திட்டங்கள் உள்வாங்கப்பட்டு மதிப்பீடுகளைத் தயாரித்து அதற்குரிய நிதியினைப் பெற்று இந்த ஆண்டின் முதற் காலாண்டில் சீரமைப்பு வேலைகளை நடைமுறைப் படுத்துவதென தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-159)





# பாதுகாப்பற்றவையாக மாறும் சொகுசுப் பேருந்துப் பயணங்கள்

## சமூக ஆர்வலர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் சொகுசு பேருந்துகள் பாரிய விபத்துக்கு உள்ளவாதால் யாரை நம்பி நாம் பேருந்தில் பயணிப்பது என்று சமூக ஆர்வலர்கள் அச்சத்துடன் கேள்வி எழுப்புகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் அதி சொகுசு பேருந்துகளின் அண்மைக்கால விபத்தால் இதுவரை சுமார் ஐம்பது பேர் வரை காயமடைந்துள்ளனர். 5 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

பல்வேறு பகுதிகளிலும் கொழும்பு பயணத்துக்கான ஆசன முற் பதிவுகள் நடைபெற்று மாலை 7.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பயணம் ஆரம்பிக்கப்படுகிறது. சொகுசு பேருந்து என்ற படியால் இலகுவாக உட்கார்ந்தும் பயணிகள் சாரதியை நம்பியும் தூங்கி விடுகின்றனர். ஆனால் கூடிய வேகத்தால் கடந்த மூன்று மாதங்களுக்குள் சுமார் 5 பேருந்துகள் பெரும் விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து வீதியில் தரித்து நின்ற டிப்ப ருடன் மோதி பாரிய விபத்துக்குள்ளா னதில் சுமார் 15 பயணிகள் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர். அத்துடன், மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மஹவெவ, சிலாபம் பகுதியில் வைத்து பேருந்து மின்மாற்றி ஒன்றில் மோதியதால் இந்த விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற சொகுசு பேருந்தொன்று ஏ-9 வீதியின் மாங்குளம் பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியது. இந்த சம்பவத்தில் சாரதியின் உதவியாளர் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பேருந்து ஒன்று பாதையை விட்டு விலகி, நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. நாத்தாண்டிய வலஹப்பிட்டிய பகுதியில் இடம் பெற்ற இந்த விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர். மேலும் 19 பேர் காயமடைந்தனர். இவ்வாறு தொடர்ச்சியாக அதி சொகுசு பேருந்துகள் விபத்துக்கு உள்ளாவதால் யாரை நம்பி பேருந்தில் பயணிப்பது என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (எ-7)

# சிவராத்திரியை முன்னிட்டு தியான நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 2
மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜ யோகா நிலையத்தினர் சிறப்புத் தியான நிகழ்வை ஏற்பாடுசெய்துள்ளனர். நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஞானக்கடலும் ஞானகங்கைகளும்,அருள் பாலிக்கும் அம்பலவானர்,சங்கமயுகத்தில் சிவனின் வருகை, சிவனை அறிந்துகொண்டதன் மகத்துவம் ஆகிய உட் பொருள்களுடன் தியான நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ)

# பிரதேச மலருக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டு 'கலாதரம்' எனும் பிரதேச மலர் வெளியிடப்படவுள்ளது. பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசம் சார்ந்த மற்றும் கலை பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கிய ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவலர்பிரதேசசெயலகம், வலி.தென்மேற்குஎனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யு.யசோதா அறிவித்துள்ளார். (ஐ)



# அருணோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழா

அளவெட்டி.மார்ச் 2
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டுவிழா நிகழ்வுகளை முன்னிட்டு நடைபவனி நேற்றுக் காலை 8.30 மணியளவில் அதிபர். நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களை நான்குஅணிகளாகப் பிரிந்து அளவெட்டி முதன்மை வீதியில் அலுக்கைச் சந்தியிலிருந்து
ஒரு அணியும், அருணாசலம் வித்தியாலயம் முன்பாகவிருந்து ஒரு அணியும், கும்பழாவளை பிள்ளையார் கோவிலிருந்து இன்னொருஅணியும், அளவெட்டிமேற்கு அரசடி சந்தியிலிருந்து ஒரு அணியுமாக நான்கு முனையிலுமிருந்து நடைபவனியாக கல்லூரி மைதானத்தை வந்தடைந்தனர். (ஐ-36)

# ஸ்தான சி.சி.த.கவுக்கு விரைவில் கட்டடம்

## ஈ.சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

வலி.மேற்கு, மார்ச் 2
நீண்டகாலமாக பௌதீக வளம் குன்றிய நிலையில் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை இருந்து வருவதைக் கண்ணுற்றுள்ளேன். விரைவில் இந்தப் பாடசாலைக்கு இரண்டு அல்லது மூன்று மாடி கட்டடம் அமைத்து வழங்குவதற்கு முயற்சி எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி அண்மையில் அதிபர் திருமதி புஸ்பவதி சண்முகராஜா தலைமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வில் கலந்து விட்டே இங்கே வருகை தருகிறேன். ஒப்பீட்டு ரீதியில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் கட்டடங்கள் மிகப் பழமையானவை.

அதே ஒத்த விதத்தில் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையும் உள்ளது. விரைவில் இந்தப் பாடசாலையின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு என்னால் ஆன உதவிகளை முழுமையாக மேற்கொள்வேன்.

உங்களது பிரதேச நந்தாவில் குள அபிவிருத்திக்காக 40 லட்சம் ரூபாவைக் கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்ய நிதி கிடைத்துள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திக்கும் ஒரு லட்சம் வழங்கியுள்ளேன்.

பாடசாலையின் அதிபர் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் நீண்டகாலத் தேவையாக நல்லதொரு கட்டடம் அமைய வேண்டுமென எண்ணியுள்ளார்.

எனவே பாடசாலை அதிபரின் கோரிக்கையை நிறைவேற்ற என்னால் ஆன முழு முயற்சிகளையும் எடுப்பேன்.

இன்றைய காலத்தில் எங்களது மழலைச் செல்வங்களை அழிக்க போதையென்ற அரக்கன் உலாவி வருகின்றான். இந்தப் பிள்ளைகளை பெற்றோர்களும், ஆசிரியர்களும் விழிப்பாக இருந்து காக்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் சசிக்குமார், ஓய்வுபெற்ற கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களையும், கேடயங்களையும் வழங்கிவைத்தார். (ஐ-50)

# பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி, மார்ச் 2
தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களாகக் கடமையாற்றிய 18 பேர் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இன்று புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் . கடந்த ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றல் வழங்கப்பட்டிருந்த நிலையில் இடமாற்றல் தாமதமாக வழங்கப்பட்டு நேற்றுப் பிரதேச செயலகத்தால் விடுவிப்புக் கடிதங்கள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ஈழத்து சிதம்பரத்தில் சிவராத்திரி சிறப்பு வழிபாடு

காரைநகர், மார்ச் 2

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி தினமான நாளைமறுதினம் திங்கட்கிழமை இரவு நான்கு சாமங்களும் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அதிகாலை 5 மணி தொடக்கம் அடியார்கள் ஒன்றினைந்து 'ஓம் நமசிவாய சிவாயநம ஓம்' என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் மறுநாள் அதிகாலை 5 மணி வரை ஓத காரைநகர் மணிவாசகர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறுநாள் செவ்வாய்கிழமை அதிகாலை 6 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி தீர்த்தமாடுவதற்காக கசூரினா தீர்த்தக்கரைக்கு எழுந்தருளி தீர்த்தவாரி இடம்பெறும்.

தொடர்ந்து மாணிக்கவாசகர் மடாலயத்தில் அடியார்களுக்கு மகேஸ்வர பூசை இடம்பெற உள்ளதாகவும் யாழ்ப்பாண நகரிலிருந்து ஆலயம் வரை நேரடி பேருந்து சேவைகள் நடத்தப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

## சிவராத்திரி தினத்தில் சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 2

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களில் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் சிவராத்திரி தினமான நாளைமறுதினம் இரவு 7 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் திடற்புலம் அருள்மிகு சிறி நரசிங்க வைரவர் ஆலயத்தில் சிவநெறிச்செம் மல் சைவப்புலவர் செ.த.குமரன் 'அன்பே சிவம் ' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதனால் இரவு 8 மணிக்கு நாரந்தனை சரவனை கர்ணன்தோட்டம் சிறி சிவசுப்பிரமணிய சுவாமி ஆ்லயத்தில் சிவ விரதங்களில் சிவராத்திரி விரதம் ' என்னும் தலைப்பிலும், இரவு 10 மணிக்கு புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி சிறி மீனாட்சியம்பாள் சமேதர சோமசுந்தரேஸ்வரர் சிவன் ஆலயத்தில் ' சிவராத்திரி விரதமகிமை ' என்னும் தலைப்பிலும், இரவு 11.30 மணிக்கு ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ' சிவனுக்கு உகந்தது சிவராத்திரி' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ஐ)

# வேலணை வளம் சுரண்டப்படுவதை தடுப்பதற்குச் சபையில் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வேலணைப் பிரதேசத்தின் வளங்கள் சுரண்டபடுவதைத் தடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு நேற்றைய அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேச சபையின் ஒத்தி வைக்கப்பட்ட சபை அமர்வு நேற்றுமுன்தினம் மீண்டும் நடைபெற்றது. தவிசாளர் நமசியவாய கருணாகர குருமூர்த்தி தலைமையில் சபை மண்ட பத்தில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்விலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

**வளங்கள் சுரண்டப்படுகின்றன**

வேலணை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத மண் அகழ்வு நடைபெறுகிறது. இவ்வாறு அள்ளப்படும் மணல் வெளி இடங்களில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எமது மக்களின் கட்டுமான தேவைகளுக்கும் மணல் பெற்று கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. எமது பிரதேசத்தின் வளங்கள் வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. முறையான அனுமதிகள் இல்லாமல் மணல் அள்ளப்படுகின்றது. அதே போன்று பனை மரங்களும், பூவரச மரங்களும் வெட்டப்படுகின்றன. தமது காணிகளில் உள்ள மரங்களை தேவை ஏற்படின் அதனை வெட்டிப்பயன்படுத்தலாம். ஆனால் சட்ட விரோதமாக மரங்கள் தறிக்கப்பட்டு இங்கிருந்து கொண்டு செல்லப்படுகின்றன.

வேறு தேவைகளைக் காரணம் காட்டி இங்கு வருபவர்கள் கற்றாளைச் செடிகளை வெட்டிச் செல்கின்றனர். கரையோரப் பாதுகாப்புக் கருதி இந்தச் செடிகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பட்டா மற்றும் முச்சக்கர வண்டிகளில் வரும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கற்றாளையை வெட்டிச் செல்கின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக வேலணைப் பிரதேசத்தின் வளங்கள் அழிக்கப்படுகின்றன. எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் கூட இந்த வளத்தை தமது தேவைகளுக்கும் கூட பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் தடைசெய்யப்பட வேண்டும். உரிய அதிகாரிகளின் மூலம் இவற்றை தடை செய்வது என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**இரும்பு சேகரிப்பு**

பழைய இரும்பு சேகரிப்பதற்கு வெளியில் இருந்தும் வேலணை பிரதேசத்துக்கு வருகை தருகிறார்கள். இவ்வாறு வருபவர்களில் சிலர் கால் நடைகளை களவாடுதல், பழையகட்டடங்களைஉடைத்து இரும்பு எடுத்தல் போன்ற பல்வேறு திருட்டு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று மக்கள் தெரிவித்தனர். கடந்த வருடமும் கூட இவ்வாறு பழைய இரும்பு சேகரிக்கும் போர்வையில் வந்தவர்கள் ஒரு வீட்டில் இருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை திருடிச் செல்ல முற்பட்ட வேளை சபை உறுப்பினரால் மடக்கி பிடிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றிருந்தது.

ஆகவே வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் வெளிப் பிரதேசத்தில் இருந்து பழைய இரும்பு சேகரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்ற தீர்மானம் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ளவர்கள் பழைய இரும்பு சேகரிக்கும் வியாபாரத்தில் ஈடுபட வேண்டும் என்றால் சபையின் அனுமதி பெற வேண்டும் என்று தீர்மானம் கடந்த சபை அமர்வில் எடுக்கப்பட்டது. ஆனால் இவை நடைமுறை படுத்தப்படாமை தொடர்பில் சபையில் உறுப்பினர்கள் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

**பொலிஸ் பற்றாக்குறை**

தீவகத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்கு ஏனைய தரப்பினருக்கும் தகவல் அனுப்பப்பட்டது. தீவகத்துக்கு நுழையும் முக்கிய இடங்களில் பொலிஸ் காவலரன் அமைக்கப்பட வேண்டும். தற்போது கடமையில் ஈடுபடும் பொலிஸாரின் எண்ணிக்கையும் அந்த நிலையங்களால் குறைவாக உள்ளது. மக்கள் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் தகவல் வழங்கினால் அவர்களை பொலிஸார் வந்து பிடிப்பதற்குள் அவர்கள் சென்று விடுகின்றனர். இது தொடர்பில் பொலிஸ் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்துத்துக் கலந்துரையாடவுள்ளேன் என்று தவிசாளர் பதிலளித்தார்.

சபையில் தீமானம் நிறை வேற்றப்பட்டால் அது நடைமுறை படுத்தப்பட வேண்டும். முதற் கட்ட நடவடிக்கையாக தீவகத்துள் நுழையும் முக்கிய இடங்கள் மற்றும் பொது இடங்களில் மறைகாணி பொருத்தப்பட வேண்டும். இங்கு தடை செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பலகை பொருத்தப்படல் வேண்டும் என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சீரமைத்த வீதியில் புல்**

வேலணை பிரதேச சபைக்கு உள்பட்ட பகுதிகளில் பல்வேறு நிதி மூலங்கள் மூலம் வீதிகள் சீரமைக்கப்பட்டன. சீரமைக்கப்பட்ட மூன்று வீதிகளில் புல் முளைத்திருக்கிறது என்று சபையில் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர். வேலணை பிரதேச சபையின் வீதிகள் வேறு வேறு நிதி மூலங்கள் மூலம் சீரமைக்கப்பட்டுவருகிறன. நிதிமூலம் வேறாக இருந்தாலும் தொழில்நுட்ப உதவியாளர் உள்பட கண்காணிப்பு வேலைகளை சபை அதிகாரிகளே மேற்கொள்ளுகின்றனர். வீதிகள் போடப்படும் போது உரிய முறைகள் கையாளப்பட்டால்தார் ஊற்றி சீரமைக்கப்பட்ட வீதிகளில் புற்கள் முளைக்காது. சீரமைப்பில் தவறு நடக்கிறது என. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

**குழப்ப நிலை**

சபையின் அனுமதி பெறாது வந்த பார்வையாளர் ஒருவர் ஊடகவியலாளர் போன்று நடந்துகொண்டார் என்று தெரிவித்து அவர் தவிசாளரால் வெளியேற்றப்பட்டார். இதனால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். கடந்த சபை அமர்வில் பார்வையாளருக்கான இருக்கையில் சமூக ஆர்வலர் இருந்து சபை நடவடிக்கைகளை தொலைபேசியில் படம் பிடித்தார். அந்த சபை அமர்வு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் உறுப்பினர்களிடம் அவர் முகநூல் செய்திக்காக காணொளி ஒன்றை சபை மண்டபத்தில் இருந்து பதிவு செய்திருந்தார். தவிசாளர் அனுமதி பெறாமல் இவ்வாறு செயற்பட்டமை தொடர்பில் கடந்த அமர்வின் பின்னர் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. நேற்றுமுன்தினம் சபை அமர்வில் அந்த சமூக ஆர்வலர் சபையில் நுழைந்தார். ஆனால் அனுமதி பெறவில்லை என்று தெரிவித்து உடனடியாக தவிசாளர் சபையில் இருந்து அவரை வெளியேற்றினார். பார்வையாளர் அல்லது ஊடகவியலாளர்கள் சபையின் அனுமதி பெற்று வர வேண்டும். ஆனால் இந்த சமூக ஆர்வலர் எந்த அனுமதியும் பெறவில்லை என்பதாலேயே அவர் வெளியேற்றப்பட்டார் என்று தவிசாளர் தெரிவித்தார்.

இதனை அவதானித்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தவிசாளர் கட்சி சார்ந்த ஊடக வியலாளர் ஒருவர் சபைக்குவருவதுவழமை. ஆகவே அந்த நபர் அனுமதி பெற்று இதுவரை காலமும் சபைக்கு வந்த சான்றை காட்டுமாறு கேட்டனர். அந்தச் சான்று இல்லை என்ற காரணத்தால் உறுப்பினர்களின் வேண்டு கோளுக்கு இணங்க வெளியேற்றப்பட்ட சமூக ஆர்வலரை சபைக்கு அனுமதிக்கு மாறு கோரி கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். அதன் பின்னர் சமூக ஆர்வலர் சபை அனுமதி பெற்று சபைக்கு அழைக்கப்பட்டார். அதன் பின்னர் சபை நடவடிக்கைகள் வழமையான முறையில் நடைபெற்றன. (எ-7)

## சிவராத்திரி உற்சவமும் சமூக விழாவும்

பளை, மார்ச் 2

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவமும் அறநெறிப் பணியில் 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய ஒன்பதாவது சமூக விழாவும் ஆலய முன்றலில் நாளைமறுதினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும்.

அன்றைய தினம் ஆலய வளாகத்தில் உள்ள சிவலிங்கப் பெருமானுக்கு சிறப்பு அபிசேகமும் நான்கு சாமப் பூசைகளும் இடம்பெறும். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆலய சமூகப் பணிகளில் ஈடுபடுவோர் மதிப்பளிப்பும் இடம்பெறுமென ஆலயநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## சிவராத்திரியை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

வவுனியா, மார்ச் 2



மகா சிவராத்திரியை முன்னிட்டு முல்லைத் தீவு நெடுங்கேணி மாமடுச் சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய "கற்பகா" அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் இடம்பெற்றன.

லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் நிதிப்பங்களிப்புடன் கோலம் போடுதல், பூ மாலை கட்டுதல், தோரணம் கட்டுதல், தேவாரம், பண்ணிசை, பேச்சு, திருக்குறள் போன்ற போட்டிகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மகா சிவராத்திரி தினமான நாளைமறுதினம் திங்கட்கிழமை பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)


## சிவராத்திரி அன்று பணியாளர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மகா சிவராத்திரி தினமான நாளை மறுதினம் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுஊழியர்ஆணைக் குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய கூட்டுறவு பணியாளர்களுக்கான விடுமுறை நாள்களில் மகா சிவராத்திரியும் உள்ளடங்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# பொன்னாலையை அடுத்து செம்மணியில் சிவலிங்கம்




*யாழ்ப்பாணம், மார்ச் 2*

சிவராத்திரி தினம் நெருங்கும் வேளையில் யாழ்ப்பாணம் செம்மணி வளைவில் இரவோடு இரவாக நேற்று சிவலிங்கம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

பொன்னாலையிலும், கடந்த வருடம் இவ்வாறு சிவலிங்கம் ஒன்று வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று செம்மணியிலும் சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற வளைவுக்கு அருகில் இந்த லிங்கம் வைக்கப்பட்டுள்ளது. மணல் மேடு போன்று அமைக்கப்பட்டு அதன் மேல் சுமார் 4 அடி உயரமான லிங்கம் வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தமிழர் நிலங்களில் ஆங்காங்கே புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளதை மக்கள் வரவேற்றுள்ளனர்.

பொன்னாலைச் சந்திக்கு அருகிலும். கடந்த ஆண்டு இவ்வாறன சிவலிங்கம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதுவும் இது போன்று கற்கள் குவிக்கப்பட்டு அதன்மேல் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிவலிங்கத்துக்கு தற்போது கோலில் அமைக்கப்பட்டு, இராவ்ணேசுவரம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தின் குடமுழுக்கும் அண்மையில் இடம்பெற்றது. (ஐ-21)

## மட்டுவிலின் தேவை அடங்கிய மனு கையளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 2

சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட மட்டுவில் வடக்கு கிராமத்தின் தேவைகள் அடங்கிய மனுவொன்று வடக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் குறைகேள் நிகழ்வின்போது கையளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளரின் நிர்வாக பரம்பலின் கீழ் வீதி விளக்குகள் பொருத்துதல் மற்றும் சேதமடைந்த வீதிகள் சீரமைத்தல் என்பன அந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மட்டுவில் வடக்குப் பகுதி உள்ளடங்களாக தேவாலய வீதி, பிலிப்ஸ் வீதி, அரசடி வீதி ஆகிய வீதிகள் சீரமைத்தல் தொடர்பாக கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வீதிகளுக்கான வேலைகள் மே மாதம் ஆரம்பிக்கப்படும் எனவும் நுணாவில் சந்தி தொடக்கம் கனகம்புளியடிச் சந்தி வரைக்குமான நீண்ட வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாத மானாவளைக் கிராமத்துக்குட்பட்ட பகுதிகளில் ஒருவார காலத்துள் வீதி விளக்குகள் பொருத்தப்படும் எனவும் வாக்குறுதியளிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-131)

## நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

தென்மராட்சி, மார்ச் 2

தென்மராட்சி பிரதேச வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுவை அளவை உபகரணங்களுக்கு இவ்வருடத்துக்கான முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்து வர்த்தக வியாபார நிலையங்களும் பின்வரும் இடங்களில் தமது அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிட முடியும்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக வியாபார நிலையங்களுக்கு எதிர்வரும் 5,6,7,8 ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகரசபை வளாகத்திலும், தென்மராட்சி கிழக்குப் பிரதேச வர்த்தக வியாபார நிலையங்களுக்கு 12 ,14 ,15 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பிரதேச சபை வளாகத்திலும், தென்மராட்சி மேற்குப் பிரதேச வர்த்தக வியாபார நிலையங்களுக்கு 18,19 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகத்திலும் முத்திரையிடும் பணிகள் இடம்பெறும் என்றும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 2

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரர் கோவிலில் நேற்று வழிபாடு நடத்தினர். தொடர்ந்து தந்தை செல்வா நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அமெரிக்கா தமக்குத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று தெரிவித்து கையெழுத்து வேட்டை நடத்துவதற்காக பல்கலைக் கழக மாணவர்களின் ஆதரவையும் பெற்றுச் சென்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில் அவர்களது பயணம் அமைந்துள்ளது. (த-7)




## சிவராத்திரி தினத்தில் சிறப்பு வழிபாடுகள்

கொடிகாமம், மார்ச் 2

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு காரைநகர் பயிரிக்கூடல் திரு வருள் மிகு சிறி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை வரை நடைபெறும்.

கலை நிகழ்வுகளாக ஆசுகவி செ.சிவசுப்பிரமணி யம் "சிவமயம்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவும், களபூமி கலையக மாணவர்களின் பக்திப் பாடல்கள், வேப்பிலை நடனம் .காவடி மிருதங்க கச்சேரியும், பயிரிக்கூடல் கலையக மாணவர்களின் தனி நடனம், சிவ நடனம், காவடி, பேச்சு என்பனவும் இடம் பெறும். அத்துடன் கலைவாணர் வில்லி சைக்குழு சின்னமணி யின் சிசியன் ஏ.என் மதியழகன் வழங்கும் திருநீல கண்டன் வில்லிசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

## முகுந்தனின் சத்திர சிகிச்சை உலக முதற்தரத்துக்கு இணை

### கனடாவின் சத்திரசிகிச்சை நிபுணர் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணத்தில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைகளைச் செய்து வருகின்ற இருதய நெஞ்சறை சத்திர சிக்சை நிபுணர் முகுந்தன் மேற்கொள்ளும் சத்திர சிகிச்சையானது உலகின் முதல் தர இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் கனடாவின் ரொரன்டோ பொது மருத்துவமனையில் செய்யப்படுகின்ற சத்திர சிகிச்சைகளுக்கு இணையானது என்று கனடா நாட்டு இருதய சத்திரசிகிச்சை நிபுணரும் பேராசிரியரும், பல நாடுகளில் இத்தகைய சத்திர சிகிச்சைகளை அவதானித்து வருபவருமான றொபேட் ஜேம்ஸ் குசிமனோ தெரிவித்துள்ளார்.

மருத்துவர் முகுந்தனைப் பாராட்டியுள்ள அவர், முகுந்தன் வடபகுதி மக்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணர் என்றும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு 4 நாள்கள் பயணமாக வந்திருந்த றொபேட் ஜேம்ஸ் குசிமனோ, இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட திறந்த இருதய சத்திர சிகிச்சையை, அதாவது இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான இருதய மாற்றுவழி சத்திர சிகிச்சையை சத்திரசிகிச்சைக் கூடத்தில் இருந்து நேரடியாக அவதானித்தார்.

இருதய சத்திர சிகிச்சையில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி, இருதயத்தில் ஏற்படும் கட்டிகளுக்கான நவீன அறுவைச் சிகிச்சை தொடர்பில் கடந்த 27 ஆம் திகதி மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களுக்கு பேராசிரியர் குசிமனோ விரிவுரை ஆற்றியிருந்தார். இந்த விரிவுரை நிறைவில் அவர் முகுந்தனைப் பாராட்டி, கனடா நாட்டு நாணயம் பொறிக்கப்பட்ட பதக்கம் ஒன்றை முகுந்தனுக்கு வழங்கி மதிப்பளித்தார்.

மருத்துவர் றொபேட் ஜேம்ஸ் குசிமனோ, உலகின் முதல் தர மருத்துவமனைகளில் ஒன்றாக விளங்கும் றொறன்டோ பொது மருத்துவமனையின் பீற்றர் முங்க் இருதய சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளராகவும் றொரான்டோ பல்கலைக்கழகத்தின் சத்திர சிகிச்சைப் பிரிவின் இணைப் பேராசிரியராகவும் விளங்குகின்றார்.

இவர் 2006 இல் சீனநாட்டு சிங்சியாங் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் சீனாவுக்குச் சென்று இருதய சத்திர சிகிச்சைப் பயிற்சிகளை மருத்துவர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கியுள்ளார்.

2006 இல் இவர் மேற்கொண்ட இருதய சத்திர சிகிச்சை படிமுறைகளை 100 மில்லியன் சீனர்கள் தொலைக் காட்சியில் நேரடியாக பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதற்காக சிங்சியாங் மருத்துவப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

யாழ்ப்பாண மருத்துவச் சங்கத்தின் ஏற்பாட்டில் வந்திருந்த ஜேம்ஸ்குசிமனோவுக்கு அனைத்துலக மருத்துக்குழுவின் கனடா நாட்டுக் கிளை அனுசரணை வழங்கியிருந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## சிவராத்திரியை முன்னிட்டு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2


சிவராத்திரியை முன்னிட்டு வட்டுக் கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் மறுநாள் காலை 4 மணிக்கு திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து திரு வீதியுலா வலம் வருதல் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# காணிகளை மீட்பதற்காக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, மார்ச் 2

கடந்த 26 ஆம் திகதி கேப்பாபிலவு பகுதியிலிருந்து காணி மீட்புப் போராட்டப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி ஊடாக நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தது.



வடக்கு மாகாண மக்களின் காணிப் போராட்டத்தை வலுப்படுத்துவதற்காக முல்லைத்தீவிலிருந்து மக்களின் பேரணியானது இன்று கொழும்பினைச் சென்றடையவுள்ளது. அரசின் மூலம் மக்களுக்கும் பன்னாட்டுக்கும் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான கட்டாயப்படுத்தலே இம் மக்களின்பேரணியின்நோக்கமாகும். காணிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு கேப்பாபிலவு, யாழ்ப்பாணம் வலிவடக்கு, மயிலிட்டி பலாலி, தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மன்னார் சிலாவத்துறை மக்களினதும் பல ஆண்டுகளாக சட்டத்தின் மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ளவதற்காகப் போராடும் பள்ளிமுனை மக்களினதும் காணி உரிமையையும் கடற்படை கையகப்படுத்தியுள்ள முள்ளிக்குளம், சம்பூர், பானம அஸ்ரப் நகர மக்களின் காணிகளையும் மக்களுக்கே மீளக் கையளிக்குமாறு கோரி, வடபிரதேசத்தில் பேரணியாக வலம் வந்து கொண்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் வவுனியாபழையபேருந்து நிலையத்தைச் சென்றடைந்து 11.45 மணியளவில் இலுப்பையடிப்பகுதியில் கையெழுத்து பெற்றுக்கொள்ளப்பட்டு, அங்கிருந்து அனுராதபுரம் ஊடாக புத்தளத்தைச் சென்றடைந்த பேரணி இன்று கொழும்பில் நிறைவடையவுள்ளது. (க)



## மூன்று சக்கர உந்துருளி பயனாளிக்கு கையளிப்பு

வவுனியா, மார்ச் 2

போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி ஒருவருக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்றுசக்கர உந்துருளி ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது.

விஸ்வமடு புதிய புன்னைநீராவி நாதன்குடியிருப்பில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான மாற்றுத்திறனாளி ஒருவருக்கே புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் உறவுகளின் நிதி உதவியில் காந்தள் கலைக்கூடத்தின் அனுசரனையுடன் இந்த உதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

எழுந்து நடக்க முடியாத நிலையிலும் சக்கர நாற்காலி உதவியுடன் கடை ஒன்றை அமைத்து மரக்கறி விற்பனையில் ஈடுபட்டு வரும் அவரின் முயற்சியை ஊக்குவிப்பதுடன் அவரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கிளி/58 கிராம அலுவலகர், .பிரிவின் அபிவிருத்தி அலுவலகர்,காந்தள் கலைக்கூடத்தினர் ஆகியோர்கள் முன்னிலையில் குறித்த பயனாளிக்கு இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-222)




## முல்லைத்தீவு பிரதேசத்தில் உதவித் திட்டம் முன்னெடுப்பு

கொடிகாமம், மார்ச். 2

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் யேர்மனி மற்றும் லண்டன் கிளைகள் இணைந்து முல்லைத்தீவு பிரதேசத்தில் சில வேலைத் திட்டங்களைமேற்கொள்ளவுள்ளன.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு கைவேலி கிராமத்தில் உதவும் இதயங்கள் கிராமிய முற்போக்கு மகளிர் ஒன்றியம் ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டது.

இந்த ஒன்றியம் சுழற்சி முறை கடன் திட்டம், தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் முயற்சிக்கு எதிராக விழிப்புணர்வு ஊட்டுதல், வன்புணர்வில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல்,சிறு கைத்தொழில் ஊக்கிவிப்பு, இடர்கள் இடம்பெறும் காலத்தில் அந்த மக்களுக்கு உதவுதல், எமது கலை கலாசாரங்களை பேணிக் காப்பதுடன்

கிராமத்தை அழகாக வைத்திருத்தல்,மரம் நடுகை போன்ற விடயங்களை ஊக்குவிப்பது போன்ற விடயங்களை மேற்கொள்ளவுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைப்பின் உறுப்பினர்களான சஜீவன், கிசோபன் , திருமதி சி.பத்மா , திருமதி மாலா காந்தல், அமைப்பின் பிரதிநிதி கார்த்திகா, மீனவர் அமைப்பின் தலைவர் ரவிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## 377 வீடுகளுக்கு நேற்று மன்னாரில் அடிக்கல்

மன்னார், மார்ச் 2

மன்னாரில் நேற்று 377 வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பணிப்புரைக்கு அமைவாக, மாவட்டம் தோறும் செயற்படுத்தப்படும் மாதிரிக் கிராமம் மற்றும் கொத்தணிக் கிராமங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் மன்னார் பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் மாதிரிக் கிராமம் மற்றும் கொத்தணிக் கிராமங்களுக்கான அடிக்கற்கள் நடப்பட்டன.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பத்திமா கிராமத்தில், 45 வீடுகளும், ஜிம்றோன் நகர் வலயம் 1 இல் 50 வீடுகளும், ஜிம்றோன் நகர் வலயம் 2 இல் 50 வீடுகளும், ஜிம்றோன் நகர் வலயம் 3 இல் 45 வீடுகளும் , ஜிம்றோன் நகர் வலயம் 4 இல் 45 வீடுகளும், கீரி வள்ளுவர் வீதி கிராமத்தில் 15 வீடுகளும், கீரி விவேகனாந்தர் வீதி கிராமத்தில் 22 வீடுகளும், சின்னக்கடை யில் 15 வீடுகளும், மூர்வீதியில் 16 வீடுகளும், தாழ்வுபாட்டில் 12 வீடுகளும், தோட்ட வெளியில் 25 வீடுகளும், அம்பாள்புரத்தில் 37 வீடுகளும் மொத்தமாக மன்னார் பிரதேசச் செயலர் பிரிவில் 377 வீடுகள் அமைக்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாகீர்,மன்னார் நகர சபை உறுப்பினர்கள்,மன்னார் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் அதிகாரி,கிராம அலுவலர், மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நானாட்டன் மற்றும் முசலிப் பிரதேச செயலர் பிரிவுகளில் 139 வீடுகளும்,மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகளும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)



## தொழில் நுட்ப கண்காட்சியும் கருத்தரங்கும்

வவுனியா,மார்ச் 2

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டளவில் இலங்கையின் ஏற்றுமதி வருவாயை 28 பில்லியன் டொலர்களாக அதிகரித்தல், புதிய ஏற்றுமதியாளர்கள் 2 ஆயிரம் பேரை உருவாக்கல் என்பனவற்றை நோக்கமாக்கொண்டு "ஏற்றுமதியில் முதலிடத்தை பெறுங்கள்" எனும் தொனிபொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், தொழில் நுட்ப கண்காட்சியும் நேற்றையதினம் காலை 8.30 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அபிவிருத்தி உபாயமுறைகள் பன்னாட்டு வர்தக அமைச்சர் மலிக்சம விக்கிரம,கைத்தொழில் வர்தக அமைச்சர் றிசாட்பதியூதீன், அபிவிருத்தி மூலோபாய பிரதிஅமைச்சர் நளின்பண்டார,நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன்,சாந்தி சிறிஸ்கந்தராஜா,வவுனியா, மன்னார் மாவட்ட செயலர்களான எம். கனீபா,மோகன்ராஸ், அரச அதிகாரிகள், வர்த்தகத்துறையினர், உற்பத்தியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக மாவட்டசெயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பகண்காட்சிகூடத்தைநாடாவெட்டிதிறந்துவைத்த விருந்தினர்கள் அதனைபார்வையிட்டனர். கருத்தரங்கு நிகழ்வு மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. (க-110)

## தங்கூசி வலையில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியா, மார்ச் 2

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குளத்தில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் வவுனியா மாவட்ட நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குளத்தில் சட்டவிரோதமான முறையில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி நிசாந்தன் யோகநாதன் தலைமையிலான அலுவலர்கள் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் சகிதம் நேற்று மாலை குறித்த பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.


இதன்போது சட்டவிரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட வலைகளை உடமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு பேரைக் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவருக்கும் சீரப் பிணை வழங்கப்பட்து. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளையும் நீர் உயிரினவளர்ப்பு அதிகார சபை மேற்கொண்டுள்ளது. (க-110)

## சக்கரநாற்காலி கையளிப்பு

வவுனியா,மார்ச் 2

கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் உதவி திட்டத்தின் கீழ் மண்டதீவு பகுதியில் மிகவும் வறிய நிலையில் இரண்டு கால்களும் செயலிழந்த குடும்ப தலைவர் ஒருவருக்கு சக்கரநாற்காலி ஒன்று வழங்கப்பட்டது.

மறைந்த திருநாவுக்கரசு சிவானந்தியின் முதலாம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு 15 ஆயிரம் பெறுமதியான சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-222)



## மணல் ஏற்றிய சாரதிக்கு விளக்கமறியல்

அனுமதிப்பத்திரம் இன்றி உழவியந்திரத்தில் மணல் ஏற்றிய சாரதியை 14 நாள்கள் விளக்கமறியில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய உழவியந்திர சாரதியையும், உழவியந்திரத்தையும் கைப்பற்றி பளை பொலிஸ் நிலையம் கொண்டுசென்று மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தினர் சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது. (க-6)

# சுருக்குவலைக்கு தடைவிதித்தபோதும் விண்ணப்பம் வழங்கும் திணைக்களம்!

## முல்லைத்தீவு மீனவர்கள் விசனம்

முல்லைத்தீவு, மார்ச் 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தத் தொழிலைச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சட்டத்துக்கு புறம்பான வேலைகளில் ஈடுபடுகிறார் என்றும் அவரை மாற்றுமாறும் மீனவர்களால் கோரப்பட்ட நிலையில் இந்த விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வாறான அனுமதிகள் வழங்கப்படவில்லை என்று உதவிப் பணிப்பாளர் கூறுகிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கடற்றொழில்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்றும் உள்ளூர் மீனவர்கள் சிலரும், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும் அந்தத் தொழில்களில் ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் முல்லைத்தீவு மாவட்ட மீனவ சம்மேளனம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது. சுருக்குவலைத் தொழில், ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், டிஸ்கோவலை, தங்கூசி வலை போன்ற தொழில்களால் கடல் வளம் சூறையாடப்படுகிறது. மீனினங்களின் இனப் பெருக்கம் குறைகின்றது. அதனால் எதிர்காலச் சந்ததிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வார்கள் என்று பிரதேச மீனவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சட்டவிரோத மீன்பிடித் தொழில்களுக்கு எதிராக கடந்த ஆண்டு முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்த மீன்பிடி அமைச்சர் சட்டவிரோத தொழில்கள் என்று மீனவர்கள் குறிப்பிடும் சுருக்கு வலைத் தொழில், ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல் என்பனவற்றை நிறுத்த வேண்டும் என்று கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்குப் பணித்தார். அந்தத் தொழில்கள் நிறுத்தப்பட்டன. முல்லைத்தீவு மீனவர்கள் நிம்மதியாக தொழிலில் ஈடுபட்டனர். அதிகளவு மீனவர்கள், இறால்கள் மீனவர்களின் வலைகளில் சிக்குகின்றன என்று மகிழ்ந்தனர். சட்டவிரோத தொழில்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் அறக்குளா, பாரை போன்ற மீன் இனங்களை விரைவில் பிடிப்போம் என்று முல்லைத்தீவு மாவட்டக் கிராமிய கடல் தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

தற்போது மீண்டும் சுருக்குவலைத் தொழிலைச் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீண்டும் சட்டவிரோத சுருக்கு வலைத் தொழிலை கொண்டுவர மாவட்ட உதவிப் பணிப்பாளர் பல சதி வேலைகளைச் செய்து வருகிறார் என்று முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் பேதுருப்பிள்ளை பேரின்பநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பலர் சுருக்குவலைத் தொழிலில் ஆர்வமாக உள்ளனர் என்ற பொய்யான தகவலையும் உதவிப் பணிப்பாளர் கடல் தொழில் அமைச்சருக்கு வழங்கியுள்ளார் என்றும் பேதுருப்பிள்ளை பேரின்பநாதன் குற்றம் சுமத்தினார். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

சுருக்குவலைத் தொழிலை பகலில் செய்யலாம். அது சட்டபூர்வமானது. ஆனால் அமைச்சர் அறிவுறுத்தியமைக்கு இணங்க அந்தத் தொழில் நிறுத்தப்பட்டுள்ளது. சுருக்குவலைத் தொழிலுக்கு மீனவர்கள் விண்ணப்பங்களைக் கோருகின்றனர். நாங்கள் அதை வழங்குகின்றோம். ஆனால் அந்தத் தொழிலுக்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

சட்டவிரோதத் தொழில் என்று அடையாளப்படுத்தப்பட்ட சுருக்கு வலைத் தொழிலுக்கு விண்ணப்பங்கள் வழங்குவதும் அதற்கு அனுமதிக்கவில்லை என்று கூறுவதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அந்தத் தொழிலே வேண்டாம் என்று மீனவர்கள் கூறும் போதும், அதை நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் பணித்திருந்தும், விண்ணப்பங்களை வழங்குவதன் நோக்கம் தான் என்ன என்றும் சமூக ஆர்வலர்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். (எ-21,246)



### தப்பி சென்றவர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி,மார்ச் 2

தேடப்பட்டு வந்த ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுத்துறை பகுதியில், கசிப்பு உற்பத்தி தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து,குறித்த பகுதியை சுற்றி வளைத்து முற்றுகையிட்டபோது, சந்தேக நபர் தப்பிச் சென்றிருந்தார்.

சந்தேக நபர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

5 பெரல் கோடவினை உடமையில் வைத்திருந்தார் என வழக்கு பதிவு செய்யப்பட்டு, நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது. (க-6)

### மாணவிகளுக்கான தொழிநுட்பவியல் கருத்தமர்வுகள்

கிளிநொச்சி,மார்ச் 2

சிறகுகள் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகப் பிரிவின் ஏற்பாட்டில் அலோகக் கேர்ள்ஸ் இன் ரச் அமைப்பினருடன் இணைந்து, தொடர்சியான கருத்தமர்வுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளன.

கருத்தமர்வுகள் தகவல் தெர்ழிநுட்ப பாடத்தெரிவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதுடன், தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலத் தேவையினை எடுத்துக்காட்டுவதாகவும் அமையும்.

நேற்று முழங்காவில் மகாவித்தியாலத்திலும்,இன்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும், நாளை முருகானதாக் கல்லூரியிலும் நாளை மறுதினம்புனித திரேசா மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும். இந்தச் செயலமர்வுகளானது தொடர்சியாக வடக்கு மாகாண பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ளது. (க)


### வெடுக்குநாறி மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சிறப்புப் பயணம்

முல்லைத்தீவு, மார்ச் 2

நெடுங்கேணி ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில்கண்டறிவதுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் வேண்டுகோளுக்கு இணங்க, நாளை மறுதினம் மகாசிவராத்திரி பூசைகள் தொடர்பாக ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்கும், பொதுமக்களுக்குமிடையில் நிலவிவரும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் கண்டறிவதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று காலை 9 மணி அளவில் செல்லவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். (க)

### "சிறுநீரகம் காப்போம்" குடிதண்ணீர் நிலையம் திறப்பு



வவுனியா, மார்ச் 2

"சிறுநீரகம் காப்போம்" எனும் அரச தலைவர் செயலணியின் சிறப்பு செயற்றிட்டத்தின் பிரகாரம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை அமைத்து மக்கள் பாவனைக்காக வழங்கும் நிகழ்வுகள் வவுனியா மாவட்டத்தின் வீரபுரம்,முதலியார்குளம் மற்றும் அறபா நகர் ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள் குடியேற்றம் மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் அரசதலைவரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே மேற்படி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்படை இதன் கட்டுமானப் பணிகளை செய்திருந்தது. (க-222)

### வவு. மருத்துவமனையில் புதிய காவு வண்டி சேவை

வவுனியா,மார்ச் 2

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில்நோயாளர்களை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவதற்கான நோயாளர் காவு வண்டி சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் தலைமையில் நேற்று மதியம் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

சிவில் தர்மவர்த்தன பவுன்டேசன் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நோயாளர் காவு வண்டி சேவையானது முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ளது.

போரின் பின்னர் வடக்கில் மக்கள் வறுமையில் உள்ளனர். மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதன் பின்னர், வீடு திரும்புவதற்கு பணமின்மை,நடந்து அல்லது பேருந்து மூலம் செல்வதற்கு இயலாமை போன்ற காரணங்கள் உள்ள நோயாளர்களை அவர்களது வீட்டுக்கு இந்த நோயாளர் காவு வண்டியின் மூலம் எடுத்துச் செல்லப்படுவார்கள்.

இந்தச் சேவையினை ஆரம்பித்து வைக்கும்நிகழ்வில் சிவில் தர்மவர்த்தன பவுன்டேசன் நிறுவனத்தின் செயலர் லேஸ்லி தர்மவர்த்தன, தலைவர் பேசி தர்மவர்த்தன,பிரதிபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், மருத்துவர்கள், மருத்துவமனையின் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-110)






### வவுனியா மருத்துவமனையில் "அம்மாச்சி" உணவகம் திறப்பு

வவுனியா, மார்ச் 2

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் கே.நந்தகுமார் தலைமையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

பொது மருத்துவமனை நலன்புரிசங்கம், விவசாயத் திணைக்களம், பிராந்தியசுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் அமைக்கப்பட்ட உணவகத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ப.பசுபதிராஜா, பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன், விவசாய திணைக்கள பணிப்பாளர் மற்றும் செயலர், வவுனியாமாவட்ட பொது மருத்துவமனை ஊழியர்கள்,மருத்துவர்கள்எனப் பலரும்கலந்துகொண்டிருந்தனர்.(க-110)

# வெடிபொருள் அகற்றியும் 100 யார் தூரமே விடுவிப்பு!

## 20 வருடங்களாக ஏதிலிகளாகவுள்ள வேம்பொடுகேணி மக்கள் கவலை

*பளை, மார்ச் 2*

பச்சிலைப்பள்ளி மேற்கில் வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் முழுமையாக நிறைவடைந்த நிலையிலும் சுமார் 100 யார் தூரமே விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட 300 மீற்றர் தூரம் விடுவிக்கப்படவுள்ளதென்று பிரதேச செயலகத்தினர் அறிவித்திருந்தனர். எமது காணிகளும் விடுவிக்கப்படவுள்ளன என்று கருதி கடந்த வாரம் அங்கு சென்றிருந்தோம். 2013 ஆம் ஆண்டு வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட பகுதியிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளமையைக் கண்டு எமது காணிகள் விடுவிக்கப்படமாட்டாது என்று ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளோம் என்று 20 வருடங்களாக ஏதிலிகளாக உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியுள்ள மக்கள் தெரிவித்தனர்.


2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்த தங்களை 19 வருடங்களாக இன்னமும் ஏதிலிகளாகவே தவிக்க விடுகின்றனர் என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் வெடிப் பொருள்களை அகற்றி மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுவிக்கின்றனர்.

குடியிருப்பு இல்லாத தென்னந் தோட்டப் பகுதிகளையும், பற்றைக் காட்டுப் பகுதிகளையும் துப்பரவு செய்வதில் வெடிப் பொருள்கள் அகற்றும் நிறுவனத்தினர் அக்கறை காட்டிவருகின்றனர். வேம்பொடுகேணிப் பிரிவில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வுகளும் அங்குள்ள மரங்களைத் தறிக்கும் செயற்பாடுகளும் தினமும் பட்டப்பகலில் இடம்பெற்று வருகின்றன என்று அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர், பளைப் பொலிஸார் ஆகியோருக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"வெடி பொருள்கள் உள்ள பகுதிக்கு அரச அலுவலர்கள் செல்ல முடியாது என்பதால் வெடி பொருள்கள் அகற்றும் பிரிவினரால் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ளதென வழங்கப்படும் சான்றிதழுக்கமைய மீள்குடியமர்வு இடம்பெறும்" என்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலத்தினர் தெரிவிக்கின்றனர். எனினும் தமது குடியிருப்புப் பகுதிகளை முதலில் பயன்பாட்டுக்கு விடுங்கள் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-9)



## செயற்கை முறை சினைப்படுத்தல் மன்னாரில் வெற்றியளித்துள்ளது

### கால்நடை மருத்துவர்கள் தெரிவிப்பு

மன்னார்,மார்ச் 2

மன்னார் மாவட்டத்தில் உள்ள பசுக்களை செயற்கை முறையில் சினைப்படுத்துவதில் பண்ணையாளர்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருவதாகவும், மன்னாரில் இது வெற்றியளித்துள்ளதாகவும் கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி அவர்கள் மேலும் கருத்து தெரிவித்ததாவது: உள்ளூர் பசுக்களில் பால் உற்பத்தி குறைவு. உள்ளூர் பசுவில் இரண்டு அல்லது மூன்று லீட்டர் பால் மட்டுமே எடுக்க முடியும். ஆனால் கலப்பின பசு ஒன்றில் பத்து லீட்டருக்கு அதிகமாக பால் உற்பத்தி பெறமுமுடியும்.

பிறீசியன், நியூசிலாந்து சகிவால், இந்தியா, பாகிஸ்தான் ஜேர்சி, ஐரோப்பிய நாடுளைச் சார்ந்த பசுக்கள் ஆகியவை இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன.

மாந்தை பிரதேசத்தில் கடந்த வருடத்தில் மட்டும் நானூறுக்கும் மேற்பட்ட உள்ளூர் பசுக்கள் கலப்பின கன்றுகளை செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் ஈன்றுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்ததோடு, தற்போது மன்னாரில் அதிகளவான பண்ணையாளர்கள் செயற்கை முறையில் பசுக்களை சினைப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிவித்தனர். (க-213)

## கணிப்புளியடி பகுதியில் நடக்கும் கலாசார சீர்கேடுகளால் பாதிப்பு

### பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

வலி.தென்மேற்கு, மார்ச் 2

சண்டிலிப்பாய் தேனைப்புளியடிப் பகுதியில் இரவில் இடம்பெறும் கலாசாரச் சீர்கேடுகளால் மாணவர்கள் உட்பட பொது மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று சுட்டிக்காட்டியுள்ள பிரதேச சபை உறுப்பினர் ஆ.இராஜகுமாரி இந்தச் செய்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தவிசாளரைக் கோரியுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய்ப் பகுதியிலுள்ள 9 ஆம் வட்டாரத்தில் சிவப்பிரகாசம் பாடசாலைக்கு முன்பாகச் செல்லும் வீதியில் ஒரு காணி கவனிப்பாரற்றுப் பற்றைக்காடாகக் காட்சியளிக்கின்றது.

இங்கு இரவு பகலாக மது அருந்துதல் உட்படப் பல கலாசாரச் சீர்கேடுகள் நிகழ்ந்த வண்ணமிருப்பதால் மாணவர்கள் உட்படப் பொதுமக்களும் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

இந்தச் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்க எவரும் முன் வராமையால் நாளுக்குநாள் இவை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த நிலை குறித்துப் பிரதேசசபையின் கவனத்துக்குப் பலதடவைகள் தெரிவித்திருந்தபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் சபையால் மேற்கொள்ளப்படவில்லை என்று கவலை தெரிவித்துள்ள உறுப்பினர் மாணவர்களினதும் பொதுமக்களினதும் நலன் கருதி இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ளார். (ஜ-115)

## விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

நல்லூர் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு கலைஞானச் சுடர் மற்றும் இளங்கலைஞர் விருது என்பவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் விண்ணப்பங்களைப் பெற்று இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் நல்லூர் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (ஜ)



## மீன்பிடி இறங்கு துறை பயனாளிகளிடம் கையளிப்பு

தெல்லிப்பழை, மார்ச் 2

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பலாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 74.4. மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீன்பிடி இறங்கு துறை வேலைகள் நிறைவு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜீலை மாதம் இந்த இறங்குதுறைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இறங்குதுறை மூலம் 140 பயனாளிகள் நன்மையடையவுள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலர் த.சிவசிறி தெரிவித்தார். (ஜ-9)

## சிவராத்திரியை முன்னிட்டு வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியில் இருந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 6 மணிவரை பக்தர்கள் தங்கள் கரங்களால் 108 சிவலிங்கங்களுக்கும் அபிசேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## தேவகாந்தனின் எழுத்துலகம் பன்முகப்பார்வை

யாழ்ப்பாணம்,மார்ச் 2

தூண்டில் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் தேவகாந்தனின் எழுத்துலகம் ஒரு பன்முகப்பார்வை நிகழ்வு யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

அமர்வு-1 காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை க.சட்டநாதன் தலைமையிலும், அமர்வு-2 நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இராஜேஸ் கண்ணன் தலைமையில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 2

கைதடி நவசக்தி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி வளாகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் தலைவி திருமதி ல.சித்திரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் ஜே.தர்மதுரை, கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப.செல்லத்துரை, சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கல்வி அலுவலர் த.விஜயதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ-9)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் இன்று சனிக்கிழமை 1.30 மணிக்கு அதிபர் திருமதி எஸ்.மாணிக்கம் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் கே.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சாந்தயாளன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்படுவது அவசியம்

## ஐ.நாவுக்கான முன்னாள் அமெ. தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 2

காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்களுடன் அவர்களது உறவுகள் தற்போதும் வீதியில் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கதறல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் வலியுறுத்தினார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் அரசியல் வாழ்க்கைக்கு 30 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



**செவிமடுங்கள்**

இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. காணாமற்போனோர் அலுவலகத்தின் உருவாக்கம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆயினும், போரில் பாதிக்கப்பட்ட மக்கள் இழந்ததை மீள வழங்க முடியாதபோதும் அவர்களது கருத்துக்களுக்கேனும் அரசு செவிமடுக்க வேண்டும்.

போரில் பாதிக்கப்பட்டவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது மிக அவசியம். அந்தவகையில் அந்த மக்கள் இழந்ததை வழங்க முடியாதபோதும் அவர்களின் கருத்துக்களுக்கேனும் செவிமடுக்க வேண்டும்.

காணாமற்போனோரின் உறவினர்கள் காணாமல் போன தமது சொந்தங்களின் புகைப்படங்களுடன் தற்போதும் வீதியில் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கதறல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

**ஜனநாயகத்துக்காக போராடியுள்ளனர்**

இலங்கை, அமெரிக்கா ஆகியஇருநாடுகளுமேகடந்த காலங்களில் ஜனநாயக ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கிறன.இலங்கை கடந்தகாலத்தில்பெரும்அரசியல் நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருந்தது.

அப்போது மக்கள் வீதிகளில் இறங்கி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு போராடினார்கள். தனியொரு கட்சிக்காகவோ தனியொரு நபருக்காகவோ அன்றி நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் தமது எதிர்கால சந்ததியினருக்காவும் அந்தப் போராட்டங்களைமுன்னெடுத்திருந்தனர்.

**ஜனநாயக அமைப்புக்களை மேலும் வலுப்படுத்தவேண்டும்**

அத்தகைய போராட்டங்கள் எந்தவொரு கட்சியாலும் ஒழுங்கு செய்யப்படாமல் சிவில் சமூக அமைப்புக்களாலும் இந்தநாட்டுமக்களாலுமே ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

இந்த விடயத்தில் நீதித்துறை சுயாதீனமாகவும் நியாயமான முறையிலும் செயற்பட்டு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியது. எனவே, தற்போதைய சூழலில் ஜனநாயக அமைப்புக்களை மேலும் வலுப்படுத்துவதன் ஊடாகவே இரு நாடுகளிலுமுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் - என்றார். (கு)



# சமந்தா பவர் உரையாற்ற முன்னர் அரங்கிலிருந்து விலகிய சிறிசேன

கொழும்பு, மார்ச் 2

கொழும்பில் நடந்த நிகழ்வில், ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் உரையாற்ற ஆரம்பிக்க முன்னர், இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அரங்கில் இருந்து திடீரென எழுந்து வெளியேறிச் சென்றார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிதியமைச்சர் மங்கள சமரவீர அரசியல் வாழ்வில் 30 ஆண்டுகளை நிறைவு செய்ததை முன்னிட்டு, கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் கலந்துகொண்டார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் அரசதலைவர் சந்திரிகா குமாரணதுங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டுத் தூதுவர்கள், முக்கிய இராஜதந்திரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதில் சமந்தா பவர் உரையாற்றத் தொடங்க முன்னதாகவே, மைத்திரிபால சிறிசேன திடீரென எழுந்து வெளியே சென்று விட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சமந்தா பவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் போது, ஜனநாயக அமைப்புகள் உறுதியாகச் செயற்பட்டதைப் பாராட்டியிருந்தார்.

அவ்வாறு உரையாற்றும் போது அரசியல் குழப்பங்களின் சூத்திரதாரியான, மகிந்த ராஜபக்ச முன்வரிசையில் அமர்ந்திருந்தார்.

இலங்கையில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட போது, சமந்தா பவர் தனது கீச்சகப் பக்கத்தில் மைத்திரிபாலசிறிசேனமற்றும்மகிந்த ராஜபக்சவை விமர்சித்து காட்டமான கருத்துக்களை வெளியிட்டுவந்திருந்தார். (கு)

# சிறந்த அனுபவங்களை பெறுவதற்கு எதிர்க் கட்சியாக இருக்கவேண்டும்

## மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 2


அரசியலில் சிறந்த அனுபவங்களைப் பெற வேண்டுமென்றால் எதிர்க்கட்சி உறுப்பினராக முதலில் இருந்திருக்க வேண்டுமென்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நீதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவின் 30 வருட கால அரசியல் பயணப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாகச் செல்பவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினராகச் செல்ல வேண்டும். அப்போது தான் பல்வேறு அனுபவங்களை பெற்று, சிறந்த அரசியல் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

அதன்பின்னர் ஆளுங்கட்சியில் அமரும்போது, மென்மேலும் தகுதிகளை அதிகரித்துகொள்ள முடியும். மக்களுக்கான சிறந்த சேவைகளையும் தடையின்றி வழங்க முடியும் என்று சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (கு)

# செயற்கை மழை பெற வேலைத்திட்டம் தயார்

## மின்சக்தி அமைச்சு தெரிவிக்கிறது



கொழும்பு, மார்ச் 2

செயற்கை மழையை பொழிவிக்கும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை ஆராய்வதற்கென்று குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. வானூர்திப் படை, மின்சார சபை என்பனவற்றின் பிரதிநிதிகளும் இதில் அடங்குகிறார்கள். நீரேந்துப் பிரதேசங்களில் மழைவீழ்ச்சி குறைவடையும் போது, இந்த முறைமையைப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை மழை என்பது மேகங்களின் மீது வெளிப்புறத் துகள்களைத் தூவி மழையைப் பொழிய வைப்பது. இந்தச் செயற்பாடு மேகவிதைப்பு என்றழைக்கப்படுகிறது. வெளிப்புறத் துகள்களைத் தூவுவதற்கு வானூர்திகள், ரொக்கெட்டுகள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

உலர் பனிக்கட்டி எனப்படும் திண்ம கார்பன்டை ஆக்சைடு, வெள்ளி அயோடைடு, சாதாரண உப்பான சோடியம் குளோரைடு, திரவ புரப்பேன் போன்றவை வெளிப்புறத் துகள்களாக மேகங்களின் மீது தூவப்படுகின்றன.

செயற்கை மழையைப் பெய்விக்கும் முறை ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை மழை பெய்யாது இருக்கும்போது செயற்கை மழை ஒரு வரப்பிரசாதமாகவே கருதப்படுகிறது என்று அமைச்சு மேலும் தெரிவித்தது. (கு)

## திருப்பதி செல்கிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 2

இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நாளை திருப்பதிக்குச் சென்று வெங்கடேஸ்வர சுவாமியை வழிபடவுள்ளார்.

அவரின் பயணத்தை முன்னிட்டு திருப்பதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னைக்கு செல்லும் தலைமைஅமைச்சர் அங்கிருந்து திருப்பதிக்குச் செல்லவுள்ளார். சிறப்பு வழிபாட்டிலும் பங்கேற்கவுள்ளார். மார்ச் 3ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# நாட்டை ஒன்றிணைக்க அரசியல் தீர்வு முக்கியம்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

பிளவடைந்துள்ள நாட்டை ஒன்றிணைக்க வேண்டுமென்றால் அரசியல் தீர்வு அவசியம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவின் 30 வருட கால அரசியல் பயணப் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை ஒன்றிணைக்கும் விடயத்தில் அனைத்து மக்களும் சிந்தித்துச் செயலாற்றும்போதே சிறந்த பயனை அடைய முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியது நாட்டின் முக்கிய தேவையாகவுள்ளது. இதற்காகப் பல முக்கிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (கு)

## 1.5 பில்லியன் ரூபா கடன் திட்டம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பு

கொழும்பு, மார்ச் 2
1.5 பில்லியன் ரூபா கடன் திட்டத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அத்தோடு 6ஆம் கட்டக் கொடுப்பனவை வழங்கவும் அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் 1.5 பில்லியன் டொலர்கள் கடனை மேலும் ஓராண்டுக்கு நீடிக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

எதிர்வரும் முக்கிய தேர்தல்கள் காரணமாக, பன்னாட்டு நாணயநிதியம் விதித்துள்ள இறுக்கமான செலவுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறும் கோரிக்கையில் வலியுறுத்தியிருந்தது. அதற்கமைய கடன் திட்டத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

### ஆர்.ரி.ஐ. மூலமாகக் கேட்கப்படும்
## அமைச்சரவைத் தீர்மானங்களை செயலர்களூடாக வழங்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 2
அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாகக் கேட்கப்படும் போது, அந்தத் தகவல்களை அமைச்சின் செயலர்களினூடாகப் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை உபகுழு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் அடிப்படையில் கோரப்படும் தகவல்களுக்கான தகவல்களை அமைச்சரவையினூடாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதனூடாக அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பான தகவல்களுக்கு அமைய குறித்த அமைச்சினூடாகச் சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சுக்களுக்குப் பகிரப்படாத விடயங்கள் குறித்து வினவப்ப்டுமாயின் அது தொடர்பிலான விளக்கத்தை அமைச்சரவையினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## டி.ஐ.ஜி. வைத்யலங்காரவுக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 2
நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் (எப்.சி.ஐ.டி.) பிரதானி மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யலங்காரவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் இரகசிய ஆவணங்கள், விசாரணைத் தகவல்களை மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யலங்கார உள்ளிட்ட அந்தப் பிரிவின் சிலர், சந்தேக நபர் தரப்புக்கு வழங்கி அதனூடாக சொத்துச் சேர்த்துள்ளனர் என்று கூறப்படும் விவகாரம் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவுக்குக் கொடுத்த உத்தரவுக்கு அமைவாகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன. (த)

# இலங்கையை விசாரிப்பதானால் இந்தியாவையும் விசாரியுங்கள்

### ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 2
போர்க்குற்றம் குறித்து இலங்கை இராணுவத்தை விசாரிக்க வேண்டும் என்றால், விடுதலைப் புலிகள் உட்பட இந்திய அமைதிப்படை மற்றும் பன்னாட்டு உளவு நிறுவனங்களையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். நடந்த உண்மைகளை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர். அதனையும் மீறி உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்றால், எல்லோரும் ஒன்றாக உண்மையை அறியலாம்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியவேண்டும் என்று கூறி வெறுமனே விசாரணைகளை நடத்துவதை விடுத்து, நடந்தவற்றை மறந்து அடுத்தக்கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில், ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு ஜெனீவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது மிகப்பெரும் அரசியல் தவறு. நாம் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி இந்த விடயத்தை இன்னும் இழுத்தடிக்காமல் இத்துடன் முடித்து விடுமாறு, பன்னாடுகளிடம் கேட்கவேண்டும்.

ஆணைக்குழு அமைத்து தகவல்களைத் திரட்டிக்கொண்டிருக்காமல், நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு வேலைத்திட்டத்தை ஜெனீவாவில் முன்வைக்க வேண்டும். இதனை நான் அமைச்சரவையில் முன்வைப்பேன்.

நடந்த உண்மைகளை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர். அதனையும் மீறி உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்றால், எல்லோரும் ஒன்றாக உண்மையை அறியலாம். விடுதலைப் புலிகள், மக்கள் விடுதலை முன்னணி, ஜே.வி.பியைக் கொலைச் செய்ய இருந்தவர்கள், இந்திய இராணுவம், இலங்கை இராணுவம், இந்திய பன்னாட்டு உளவு நிறுவனங்கள் அனைவரையும் விசாரிக்க வேண்டும். அல்லது எல்லாவற்றையும் மறந்து விடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## 'ஹாசிஷ்' போதைப்பொருள் மீட்பு கொச்சிக்கடையில் 3 பேர் கைது

கொழும்பு, மார்ச் 2
நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் 600 கிராம் ஹாசிஷ் போதைப்பொருள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொட வடக்கு குற்றவியல் புலனாய்வுப் பிரிவு நடத்திய தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைப்பற்றப்பட்ட ஹாசிஷ் போதைப் பொருள் சுமார் 7.8 மில்லியன் ரூபா பெறுமதியுடையது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாலியில் இருந்து வான்வழித் தபால் மூலமாகப் பொதியில் அனுப்பப்பட்ட பொருள்களுக்குள்ளேயே குறித்த போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் மினுவங்கொட, ஹொரண மற்றும் முனமல்தெனிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## கைது செய்யோம் என்று உறுதியளிக்க முடியாது!

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் கைது செய்யமாட்டோம் என்று எந்த உறுதி மொழிகளையும் வழங்க முடியாது என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, தலைமை நீதியரசர் நளின் பெரேராவுக்கு உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

தன்னைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்வதைத் தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்கு மாறு கோரி முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு தலைமை நீதியரசர் நளின் பெரேரா தலைமையில் நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன மற்றும் முர்து பெர்ணான்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு வந்தது.

இதன்போதே அட்மிரல் வசந்த கரன்னாகொடவைக் கைது செய்ய மாட்டோம் என எந்த உறுதி மொழிகளையும் வழங்க முடியாது என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, தலைமை நீதியரசர் நளின் பெரேராவுக்குத் தெரிவித்தார். மனு மீதான விசாரணை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

# வசந்த கரன்னகொடவுக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரம்



கொழும்பு, மார்ச் 2
கொழும்பில் 2008-2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விரைவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையின் போது, மேலதிக் சொலிசிற்றர் ஜெனரல் விராஜ் தயாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தம்மைக்கைதுசெய்தற்கு முயற்சிக் கின்றனர் என்றும் அதனைத் தடுத்து நிறுத்தும் இடைக்கால ஆணையைப்பிறப்பிக்கு மாறும் கோரி, அட்மிரல் வசந்த கரன்னகொட உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் தலைமை நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, முர்துபெர்னான்டோ ஆகியோரைக் கொண்ட அமர்வில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட காரணங்களுக்காக, இந்த மனு மீதான பரிசீலனையில் இருந்து விலகிக் கொள்வதாக நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன அறிவித்தார்.

இதையடுத்து, இந்த அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதென நீதியரசர்கள் முடிவு செய்தனர்.

நேற்றைய விசாரணைகளின் போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான, மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, கொழும்பில் 2008 2009 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக, இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு எதிரான விசாரணைகள் முடிந்து விட்டதாகவும், அவருக்கு எதிராக விரைவில் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (த)



# பிரிட்டன் நீதித்துறையில் அரசியல் அழுத்தங்கள்

## அதை எதிர்த்துப் போராட்டம்

லண்டன், மார்ச் 2
பிரிகேடியர் பிரியங்கவுக்கு எதிரான வழக்கில் அரசியல் அழுத்தம் இருப்பதாகத் தெரிவித்து, அதற்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் பிரிட்டன் வெஸ்மினிஸ்ரரர் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இதேவேளை, பிரிகேடியர் பிரியங்கவுக்கு எதிரான வழக்கு பிரிட்டன் வெஸ்மினிஸ்ரர் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

லண்டனில் 2018ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திர நாள் அன்று போராட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி கழுத்தை அறுக்கும் சைகையை காண்பித்து அச்சுறுத்தல் விடுத்த செயலானது. இலங்கை இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் கடமையுடன் தொடர்புடையதல்ல என்று வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் நீதிமன்ற தலைமை நீதிபதி எமா ஆபத்நொட், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு இராஜதந்திர தண்டனை விலக்கு செல்லுபடியாகாது எனவும் நேற்று அறிவித்துள்ளார்.

'கழுத்தை அறுக்கும்' சைகையை காண்பித்து புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு இராஜதந்திர தண்டனை விலக்கு இருப்பதாக இலங்கை அரசு தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையிலேயே லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் நீதிவான் இந்த முடிவை அறிவித்திருக்கின்றார். (ஒ.5)

# மூன்றாவது ஆண்டு ஆரம்பம் கேப்பாபிலவில் உணவு ஒறுப்பு

## கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

**இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தின் மூன்றாவது ஆண்டு இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். இந்தப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு கேப்பாபிலவில் இடம்பெறவுள்ளது.**

அதேவேளை அரச தலைவர் செயலகத்துக்கு முன்பாகவும் இன்று கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

காணிகளை விடுவிக்க வலியுறுத்தி கேப்பாபிலவில் இடர்களின் மத்தியில் போராடும் மக்களுக்கு தீர்க்கமான முடிவுகள் கிடைக்கவில்லை. அவர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் போராட்டம் இன்று 731ஆவது நாளிலும் தொடர்கிறது. காணி விடுவிப்புக்காக மக்கள் வீதியில் இறங்கி இன்று மூன்றாவது வருடம் ஆரம்பிக்கிறது. அதை நினைவுபடுத்தியே அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் மக்களும் அடையாள உணவு ஒறுப்பில் கலந்து கொள்ளுமாறு கேப்பாபிலவு மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காணிகளை விடுவிக்க வலியுறுத்தி கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்து அரச தலைவர் செயலகம் வரையான வாகனப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பேரணி மக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்று இன்று கொழும்பைச் சென்றடையவுள்ளது. அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும். (ஒ.5.21)

# கிளிநொச்சியில் சிறுவனை காணவில்லை

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த 14 வயது சிறுவனைக் கடந்த 24ஆம் திகதி முதல் காணவில்லை என்று சிறுவனது தந்தை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கோணேஸ்வரன் கோகுலன் (டிலான்) என்ற சிறுவனே, தேவாலயத்துக்குச் சென்றுவருவதாக தெரிவித்து சென்றவர் இது வரைவீடுதிரும்பவில்லை என்று தந்தை தெரிவித்துள்ளார். (ஒ.5,214)

# மறப்போம் மன்னிப்போம் என்பதை ஏற்க முடியாது

## இப்படிச் சொல்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 2
கிளிநொச்சிக்கு வந்திருந்தபோது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மறப்போம் மன்னிப்போம் என்று கூறியிருந்தார். அது அவருக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் மக்கள்பட்ட துன்பங்களுக்குத் தீர்வாக உண்மைகள் கண்டறியப்படவேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறிதர் தியேட்டரில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம் என்றே இன்று ஆட்சி புரிபவர்கள் கூறி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. அதே போன்றே இந்த ஆட்சியைக் கொண்டு வந்தோம் என கூறுபவர்களும் இது வரை எதுவும் செய்யவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை, கர்ணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகள் கிடைக்கும் என்றே மக்கள் நம்பி வாக்களித்தார்கள். ஆனால் மக்கள் தொடர்ந்தும் வீதிகளில் போராடாடிக்கொண்டே இருக்கின்றார்கள். எங்களிடம் ஆட்சி இருந்தால் 6 மாதங்களுக்குள் பிரச்சினைகளுக்குள் தீர்வைக் காண்போம்.

யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை முதலில் அமைத்தது நாம்தான். கறையான் புத்தெடுக்க கருநாகம் புகுந்த கதையாகிவிட்டது.

காணாமல் போன உறவுகளின் உணர்வுகளுக்கு மறப்போம் மன்னிப்போம் என்பதனூடாக தீர்வுகளைக் காணமுடியாது. அவர்களது வலிகளை போக்குவதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் அதிகாரங்களை தம்மிடம் கொண்டுள்ள தமிழ் அரசியல் தரப்பினர் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அனைத்தையும் தவறவிட்டு இன்று மறப்போம் மன்னிப்போம் என்று கூறுவது நியாயமானதல்ல.

1983 ஆம் ஆண்டு முதல் வன்முறைகளால் காணாமல் போனவர்களது உறவுகளுக்கு இன்றுவரை நியாயமான எந்தவொரு தீர்வையும் மாறிமாறி வரும் அரசுகள் பெற்றுக் கொடுக்கவில்லை. இதற்கு தமிழ் மக்களின் தரப்பிலிருக்கும் சுயநல அரசியல் தலைமைகள்தான் காரணம். கசப்பான சம்பவங்களுக்கு மறப்போம் மன்னிப்போம் என்ற

> யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை முதலில் அமைத்தது நாம்தான். கறையான் புத்தெடுக்க கருநாகம் புகுந்த கதையாகிவிட்டது.

வார்த்தை பரிகாரமாக இருந்தாலும் அதை ஏற்பதற்கு கடந்த காலத்தில் தமிழ் மக்கள்பட்ட வலிகளுக்கும் வதைகளுக்கும் தீர்வாக உரிய முறையில் உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு நிரந்தரத் தீர்வுகள் பெற்றுக்கொடுப்பதனூடாக இது சத்தியமாகும்.

**மறைப்பு**

கடந்த ஆண்டு இறுதியில் ஆட்சி மாற்றம் நடைபெற்ற போது கோடிக்கணக்கான பணம் கைமாறப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து மதிப்பு வெளியிடக் கோரப்பட்டது. அதனை வெளியிட்ட சில உறுப்பினர்களின் சொத்து விவரத்தை பார்க்கும் போது முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தது போல் உள்ளது. எனது சொத்தாக சிறிதர் தியேட்டர் கட்டடமும், கஸ்தூரியார் வீதி கட்டடமும் இல்லை. அதனை எனது சொத்தாக நினைக்காதீர்கள். எனது சொத்துக்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும், தேர்தல் திணைக்களத்திலும் ஒப்படைத்துள்ளேன். எனது சொத்து விவரத்தை பார்க்க விரும்புவோர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**எதிர்ப்பு**

வடக்கில் பௌத்த மாநாட்டை வடமாகாண ஆளுநர் நடத்த உள்ளதாக கூறியமை எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் செயற்பாடு. வடக்கில் பௌத்த மயமாக்கப்படுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் வடக்கில் பௌத்த மாநாடு நடத்துவது தேவையற்ற விடயம் - என்றார். (ஒ.5.7.37)



# நோர்வே அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு, மார்ச் 2
நோர்வேயின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் மரியான் ஹேகன் இரண்டு நாள்கள் உத்தியோகப் பூர்வ பயணமாக எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது அவர், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# சுண்ணாம்பு, புகையிலை, பாக்குகள் இல்லாத ஆரோக்கியமான தாம்பூலம்

## மைத்திரி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 2
ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் 2012ஆம் ஆண்டு சுகாதார அமைச்சராக இருந்த போது சுண்ணாம்பு, புகையிலை மற்றும் பாக்குகள் இல்லாத ஆரோக்கியமான முன்மாதிரி தாம்பூலத்தை மகா நாயக்க தேரர்களுக்கு வழிபாடு செய்து, தான் இந்த நாட்டின் மகா சங்கத் தலைமுறையினரிடம் முன்வைத்த கோரிக்கையை மீண்டும் ஒருமுறை சங்கைக்குரிய மகா சங்கத்தினரிடம் முன்வைப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

உலக வாய்ச் சுகாதார தினத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் மஹரகம அபேக்சா மருத்துவமனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:'

தாம்பூலம் எமது பௌத்த கலாசாரத்துடன் இணைந்த முக்கியமானதொரு அம்சம் என்றபோதும், காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு அதனை ஆரோக்கியத்தைப் பேணும் தாம்பூலமாக மாற்ற வேண்டியுள்ளது. இதற்கான முக்கிய பொறுப்பு பௌத்த மக்களுக்கு உள்ளது. மகா சங்கத்தினரின் தலையீட்டுடன் இதுபற்றிய அறிவூட்டல் மற்றும் தெளிவுகள் வழங்கப்பட வேண்டும்.

வாய்ப் புற்றுநோய் தற்போது முக்கிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது. வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக வெற்றிலை உண்ணும் பழக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நோய் அதிகம் ஆண்களிடையே பரவி வருகின்றது. குறிப்பாக மலை நாட்டு பிரதேசங்களில் உள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாய்ப் புற்றுநோய் காரணமாக நாட்டில் நாளொன்றுக்கு சுமார் மூன்று நோயாளிகள் உயிரிழக்கின்றனர்.

வாய்ச் சுகாதார மேம்பாட்டை கொள்கை சார்ந்ததொரு அம்சமாக கருதி முன்னுரிமையளிக்க வேண்டும். வெற்றிலை உண்ணும் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளவர்களை அதிலிருந்து மீட்பதற்கு ஆலோசனை நிலையங்களை நிறுவ வேண்டும் - என்றார். (ஒ.5)

# நாடு முழுவதும் 13 அன்று ஆசிரியர்கள் போராட்டம்

கொழும்பு, மார்ச் 2
நாடு முழுவதும் எதிர்வரும் 13ஆம் திகதி போராட்டம் நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர்சேவை சங்கம் தெரிவித்துள்ளது.
கல்வியமைச்சுக்கு முன்பாக நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்காததன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் உபதலைவர் சு.பிரதீப் தெரிவித்துள்ளார்.
இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்தரமுல்லை, பெலவத்தை பகுதியில் ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
22 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விச் சேவையில் காணப்படும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியும், 30 மாதங்கள் நிலுவைச் சம்பளத்தை வழங்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
அதில் ஆசிரியர்கள் மீது தண்ணீர்த் தாரைப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு நடத்தி போராட்டம் நடத்தியிருந்தனர். (த)

# கண்ணியமான பிள்ளைகள் நிகழ்ச்சித் திட்டம் மார்ச் 15

## அரசதலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
நாட்டின் பிள்ளைகளை போதைப்பொருளிலிருந்து விடுவிக்கும் "கண்ணியமான பிள்ளைகள்" நிகழ்ச்சித் திட்டம் மார்ச் 15 தொடக்கம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுமென்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
புதிய தலைமுறையினரையும்பாடசாலைபிள்ளைகளையும் போதைப்பொருளிலிருந்து விடுவிப்பதற்காகப் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக கண்ணியமான பிள்ளைகள் (சுஜாத தருவோ) நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இலங்கை ஊக்க மருந்து தடுப்புமுகவர்நிறுவனத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அதில்உரையாற்றும்போதே அவர்இவ்வாறுதெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நச்சுத்தன்மை வாய்ந்த போதைப்பொருள்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைப்பிள்ளைகளுக்கு மத்தியில் மிகவும் சூட்சுமமான முறையில் கொண்டு செல்லும் கடத்தல் நடவடிக்கை ஒன்று நாட்டில் இடம்பெறுகிறது. அதனைத் தடுக்க மாணவர்களை அறிவூட்டும் விரிவான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கல்வி அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, சுகாதார அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களும் அரசதலைவர் அலுவலகமும் இணைந்து முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பங்குபற்றலுடன், மருத்துவ நிபுணர்கள் குழுவொன்றையும் இணைத்துக்கொண்டு மிகவும் நட்புறவுடன் திட்டத்தை நாட்டின் பிள்ளைகளுக்கு மத்தியில் கொண்டு செல்லவுள்ளோம் என்று அரசதலைவர் தெரிவித்தார்.
இலங்கையில் நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களை பயன்படுத்துகின்றவர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் உள்ளனர். சட்டவிரோத போதைப்பொருள்கள் தொடர்பான சட்டங்களை பலப்படுத்துவதற்கும் அவற்றைத் தடுப்பதற்கும் அரசு நாடு முழுவதும் விரிவான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை மறுவாழ்வளிப்பதற்கான அதிகார சபையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (த)

# 20 சிங்களக் குடும்பங்களுக்கு 16 கிராம அலுவலர் பிரிவா?

## சார்ள்ஸ் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், மார்ச் 2
ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 500 பேர் வாழும் மன்னார் மாவட்டம் 156 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அங்கு 20 சிங்களக் குடும்பங்கள் வாழும் நிலையில் அவர்களுக்கான 16 கிராம அலுவலர் பிரிவுகளை பௌத்த கிராமங்களாக எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பௌத்த சின்னங்கள் அல்லது பௌத்த குடும்பமேனும் வாழ்ந்தால் அந்தக் கிராமத்தை பௌத்த கிராமமாக ஏற்றுக்கொள்வது தொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு விவரம் திரட்டுகின்றது. இதன் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மாவட்டத்தில் காணப்படும்156 கிராம அலுவலர் பிரிவுகளில் மொத்தம் 19 குடும்பங்கள் மட்டுமே பௌத்த மதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்த 19 குடும்பங்களும் 16 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்கின்றன. அவர்களுக்கென்று 5 பௌத்த வழிபாட்டு இடங்கள் உள்ளன. இதனாலேயே நாம் ஆரம்பம் முதலே பௌத்தர்கள் வாழாத இடத்தில் பௌத்த சின்னங்கள் அமைக்கப்படுவதை எதிர்த்தோம். அப்போதெல்லாம் மத வழிபாட்டுத் தலம் நல்லிணக்கத்தையே ஏற்படுத்தும் என்றனர். ஆனால் இன்று புது வடிவத்தில் ஆக்கிரமிப்பு முளைக்கின்றது. நாட்டில் ஜனநாயக ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றால் இதுவும் ஜனநாயக மீறல்தான்.
இந்த மீறலில் இருந்து எமது மக்களை மீட்கவும் நாம் எந்த எல்லைக்கும் செல்வோம். இதனால் குறித்த விடயத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்க முடியாது என்று உடனடியாக மாவட்டச் செயலர் ஊடாகவும் நேரடியாகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதையும் மீறித் தொடர்ந்தும் மேற்கண்ட முயற்சி இடம்பெறுமானால் அவற்றுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. அதற்கான முழுப் பொறுப்பையும் அரசுதான் ஏற்கவேண்டும் - என்றார். (த-105)

# சொல்வித்தை காட்டி இழுத்தடிக்காதீர்கள்

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

மறப்போம், மன்னிப்போம் என்றெல்லாம் சொல்வித்தை காட்டி இனியும் காலத்தை இழுத்தடிக்காதீர்கள். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்தாகவேண்டும். பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அரசு உயிர்கொடுக்க வேண்டும்.
இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் தெரிவித்தார்.
கம்பளையில் நடைபெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவர்களின் உறவினர்கள் தினமும் விழிநீர் வடிப்பதுடன், என்றாவது ஒருநாள் திரும்பிவருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் வலிகளைச் சுமந்தபடி வாழ்கின்றனர். இருந்தும் ஏக்கத்துடன் முடியும் பொழுதுகள் ஏமாற்றத்துடனேயே விடிகின்றன.
படையினரிடம் சரணடைந்தவர்கள், ஒப்படைக்கப்பட்டவர்கள், விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல்ஆக்கப்பட்டுள்ளனர் என்று நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையிலும், பரணகம ஆணைக்குழ முன்னிலையிலும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்திடமும் மக்கள் சாட்சியங்களை வழங்கியுள்ளனர். மன்னிப்பு என்பது பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையைப் பொறுத்தவிடயம்.
தாமதித்து வழங்கப்படும் நீதிகூட மறுக்கப்பட்ட நீதிக்குச் சமன். இனியும் இழுத்தடிப்புச் செய்யாமல் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த)

# மகிந்த, சம்பந்தன் உள்ளிட்டோரை ஜே.வி.பி. நேரில் சந்தித்துப் பேசும்

## அதன் தலைவர் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களை ஜே.வி.பியினர் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். அடுத்தவாரம் தொடக்கம் சந்திப்பு இடம்பெறும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.
நிறைவேற்று அரசதலைவர் முறைமையை முற்றாக ஒழிக்கக்கோரும் அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்தை ஜே.வி.பி.நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. அது இன்னும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.
இந்தநிலையிலேயே குறித்த யோசனைக்கு ஆதரவு திரட்டும் வகையில் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.
தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். (த)



# விமானி அபிநந்தன் விடுதலை உலகுக்கு சிறந்த எடுத்துக்காட்டு

## வே.இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
இந்தியாவும் பாகிஸ்தானும் புரிந்துனர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இன்று இந்தியாவின் விமானி அபிநந்தனை விடுதலை செய்வதற்கு பாகிஸ்தான் தலைமை அமைச்சர் எடுத்துள்ள தீர்மானம் அவருடைய மனிதாபிமானத்தை எடுத்துக்காட்டுகின்றது. இது உலகுக்கே சிறந்த எடுத்துக்காட்டு என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
நுவரெலியா, கொத்மலை லபுக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் 27 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியாவும் பாகிஸ்தானும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு இன்று ஏற்பட்டுள்ள நிலமைக்குச் சுமுகமான தீர்வை எட்ட வேண்டும். போரின் வலியை நாங்கள் நன்கு அறிவோம். போரால் யாருக்கும் நன்மை கிடைக்காது. அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் மக்களே. அதன் இழப்பைப் பூர்த்தி செய்வது மிகக் கடினம்.
இந்திய தலைமைஅமைச்சர் நரேந்திரமோடி மனிதாபிமானம் நிறைந்தவர். அவர் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்வார் என்று நம்புகிறேன் என்று மேலும் தெரிவித்தார். (த)



# ஆசிரிய மத்திய நிலையம் பசறை வலயத்தில் திறப்பு

கொழும்பு, மார்ச் 2
மலையகம் பசறை கல்வி வலய ஆசிரியர்களின் நலன்கருதி ஆசிரிய மத்திய நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.
கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத்துக்கு அமைய இது அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் ஊவா மகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உட்பட ஊவா மாகாண சபை உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகள் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர். (த)



# போதைப்பொருள் குற்றங்களை விசாரிக்க தனியான நீதிமன்றம்

## மைத்திரி புதிய யோசனை

கொழும்பு, மார்ச் 2

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க தனியான சிறப்பு நீதிமன்றத்தை அமைப்பதுபற்றி அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்துதல், குற்றங்களைக் குறைத்தல் தொடர்பான சட்ட வரைபுகள் தொடர்பாக அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நீண்டகாலம் செல்கின்றமை, போதைப்பொருள் ஒழிப்புக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பெரும் தடையாகவுள்ளது. இந்த நிலமை விரைவில் சரி செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியிலேயே இந்த புதிய நீதிமன்றத்தையும் நிறுவ முடியுமா என்று ஆராயவும்.

போதைப்பொருள்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது தொடர்பாக இன்று நாட்டின் அனைத்து மக்களும் கவனம் செலுத்தியுள்ளனர். இதேநேரம் கைப்பற்றப்படும் போதைப்பொருள்களை அழிப்பது தொடர்பானமுறைமைகளை திருத்தவேண்டும் - என்றார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் பாபுல் போன்ற போதைப்பொருள்களுக்கு அடிமையாகின்ற நிலமை அதிகரித்து வருவது பற்றியும் அரச தலைவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன், சட்ட ஏற்பாடுகள் இல்லாமை இதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தடையாக உள்ளதாகப் பாடசாலை அதிபர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தன்னிடம் தெரிவிப்பதாக குறிப்பிட்ட அரச தலைவர், இதற்கான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தார். (ஒ.5)

# வலி.வடக்கில் திங்களன்று 30ஏக்கர் காணி விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 30 ஏக்கர் காணி மற்றும் மக்கள் பாவனைக்குரிய வீதி ஒன்றும் நாளை மறுதினம் திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளது.

மயிலிட்டித்துறை வடக்கு, மயிலிட்டி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் காணிகளும், பலாலி கிழக்கில் முதன்மை வீதி ஒன்றும் விடுவிக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவசிறியிடம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இராணுவத்தினர் காணி விடுவிப்புக்கான பத்திரத்தை ஒப்படைக்கவுள்ளனர்.

காணிகள் விடுவிக்கப்படவுள்ள நிலையில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ.5,26)

## வடக்கில்...

தேசியக் கூட்டமைப்பு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியிருந்தது. தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வடகிழக்கில் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று உறுதியளித்திருந்தார்.

தலைமை அமைச்சரின் உறுதிமொழியை மீறி கடந்த காலங்களிலும் சிங்களவர்கள் சிற்றூழியர்களாகவும், சாரதிகளாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நடவடிக்கை தற்போதும் தொடர்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. கடந்த 25ஆம் திகதி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டச் செயலகங்களுக்கு தென்பகுதியைச் சேர்ந்த 7பேர் சாரதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே மாவட்டச் செயலகங்களில் வடக்கைச் சேர்ந்த பலர் அமைய அடிப்படையில் பணியாற்றும் நிலையில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

## மகிந்த...

உள்ள மகிந்த ராஜபக்சவின் உத்தியோகப் பூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை எனவும் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடுவதே தமது நோக்கம் எனவும் இந்தியத் தூதுவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கூறியுள்ளார்.

தனது ஆட்சிக்காலத்தின் போது இந்திய அரசால் சம்பூர் அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு இந்திய அரசு வழங்கிய ஒத்துழைப்புக்கு தமது நன்றிகளை மகிந்த ராஜபக்ச இதன்போது தெரிவித்துள்ளார். எனினும், தற்போதைய அரசால் குறித்த செயற்றிட்டம் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் கவலை அடைவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## பதின்ம வயதுச்...

3 இளைஞர்களை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 14 வயதுச் சிறுமியைக் காணவில்லை என்று அவரது தாயார் முறைப்பாடு செய்திருந்தார். மறு நாள் சிறுமி வீதியால் சென்றதைக் தயார் கண்டுள்ளார். சிறுமியை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தினார். அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது, காதலிப்பதாகத் தெரிவித்து தாவடியைச் சேர்ந்த 17 வயது இளைஞன் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தெரிய வந்தது. சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இளைஞனைக் கைது செய்துள்ளோம்.

கடந்த 24ஆம் திகதி 13வயதுச் சிறுமி உறவினர் வீட்டுக்குச் சென்று இரவு தாமதமாகி வந்துள்ளார். அவரிடம் தாயார் விசாரித்தபோது, சுன்னாகத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞன் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார். தாயார் முறைப்பாடு செய்தார். சிறுமியிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலத்துக்கு அமைவாக 18 வயதுடைய இளைஞனைக் கைது செய்தோம்.

இதேவேளை, இந்தச் சிறுமியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார். அதனையும் அவர் இப்போது விசாரணைகளின்போது கூறியுள்ளார். அதனையடுத்து அந்த இளைஞனையும் கைது செய்துள்ளோம் என்று சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5,26)

## சிவராத்திரிக்காக...

தினம் திங்கட் கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்கு மறுநாள் செவ்வாய்க்கிழமையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தில் தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களுக்கான விடுமுறையை வழங்குமாறு ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தத் தினத்துக்கான பதிற்பாடசாலை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5,7)

## கோணேஸ்வரத்தில்...

பட்டிருந்ததை அவதானித்த கோயில் நிர்வாகத்தினர், பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில், சிவலிங்கத்தை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளே உடைத்ததாக குறித்த பகுதியில் உள்ள கடையின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர். இருப்பினும் சிவலிங்கம் வைக்கப்பட்ட இடம் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியதென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிவராத்திரி முடியும் வரையில் குறித்த இடத்தில் சிவலிங்கத்தை வைப்பதாகக் கூறி, கோயில் நிர்வாகத்தினர் சிலையை வைக்க முற்பட்டனர். அவ்வாறு சிவலிங்கத்தை வைத்தால் புத்தரின் சிலையை வைப்பதாக கூறி அங்குள்ள சிங்களவர்கள் முரண்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர், சிவலிங்கத்தை வைப்பதற்கு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். அதற்கமைய திருக்கோணேஸ்வரம் கோயில் நிர்வாகத்தினர் சிவலிங்கத்தை நிறுவியுள்ளனர். (ஒ.5)

## இலங்கைக்கு...

டோனியா, மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்து எதிர்வரும் 20ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை சமர்ப்பிக்கவுள்ளன.

இதற்கான தீர்மான முன்வரைவு, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், ஜெனிவாவில் உள்ள உறுப்பு நாடுகள் மத்தியில் நேற்றுமுன்தினம் உலாவ விடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, அரசுக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் அளிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள சபையின் 43ஆவது கூட்டத்தொடரில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது இந்த வரைவில், 2021 மார்ச் மாதம், விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் விரிவான அறிக்கையுடன், சபையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் அந்த வரைவில் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் இந்த வரைவில், 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஐ.நா...

உயர்மட்டக் குழுவை இங்கிருந்து அனுப்புவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தெரிவித்தார்.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்ஏ.அசீஸ் மற்றும் அவரது அதிகாரிகளையே இந்த அமர்வை கையாளுமாறு அயலுறவுத்துறை அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## விலாவாரியாக...

திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடுகின்றது.

புதிய அரசமைப்பில் முக்கிய விடயங்களான தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் என்பன தொடர்பில் கட்சிகள் இடையே பொது இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் மட்டும் கட்சிகள் இடையே இணக்கப்பாடு ஒருமித்த கருத்து நிலவுவதால், அதிகாரப் பகிர்வை மட்டும் அரசமைப்பினுள் எப்படி புகுத்துவது அதனைச் செயற்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 4 பேர் கொண்ட புதிய குழு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கும் வகையிலான தீர்மான முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு, ஐ.நாவின் கால அவகாசம் ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உள்ளனர். இந்நிலையில், இவை தொடர்பில் விலாவாரியாக ஆராய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் கூடுகின்றது.

5ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நாடாளுமன்றம் கூடுகின்றது. அதற்கு முன் காலையில் அல்லது மாலையில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும். (ஒ.5,22)

## இந்திய...

பாகிஸ்தானால் ஒப்படைக்கப்பட்டார்.

காஷ்மீர் புல்வாமா பகுதியில் கடந்த 14ஆம் திகதி ஆயுததாரியொருவர் நடத்திய தற்கொலைப் படைத்தாக்குதலில் 40 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதற்கு பாகிஸ்தானும் பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஸ்இமுகமது என்ற தீவிரவாத அமைப்பும்தான் காரணம் என்று இந்தியா குற்றம் சுமத்தியது.

இதற்குப் பதிலடியாக கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்தியாவின் பன்னிரு மிராஜ் ஜெட் போர் வானூர்திகள் சுமார் ஆயிரம் கிலோ வெடிபொருளைச் சுமந்துசென்று பாகிஸ்தானின் ஆட்சிக்கு உட்பட்ட காஷ்மீர் பகுதியில் உள்ள போராளிகளின் முகாம்களின் மீது தாக்குதல் நடத்தின.

கடந்த புதன்கிழமை காலை மீண்டும் தாக்குதல் நடத்துவதற்காக இந்திய வானூர்திகள் புறப்பட்டுச் சென்ற வேளையில் பாகிஸ்தான் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு வானூர்திகள் வீழ்த்தப்பட்டன. ஓர் இந்தியச் சிப்பாய் உயிரிழந்தார். அபிநந்தன் பாகிஸ்தானால் சிறைப்பிடிக்கப்பட்டார். அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று பன்னாட்டுச் சமூகம் வலியுறுத்தியது. சவூதி, ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா நாடுகள் நடத்திய பேச்சின் அடிப்படையில் பாகிஸ்தானால் அவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

அபிநந்தனை வானூர்தியின் மூலம் மீட்பதற்கு இந்தியா பாகிஸ்தானிடம் கோரிக்கையை முன்வைத்தது. எனினும் இந்தக் கோரிக்கையை பாகிஸ்தான் மறுத்தது. வான் வழியாக அல்லாமல் (அபிநந்தன் உளவு பார்க்க வாய்ப்பு உள்ளது என்ற அடிப்படையில்) தரை வழியாகவே அவரை விடுவிக்க முடியும் என்று பாகிஸ்தான் தெரிவித்தது.


பஞ்சாப் வாகா எல்லை வழியாகவே அபிநந்தன் விடுவிக்கப்படுவார் என்று பாகிஸ்தான் தெரிவித்தது. நண்பகல் 11 மணி முதல் அவர் எப்போது விடுவிக்கப்படுவார் என்பது தொடர்பில் பெரும் பரபரப்பு நிலவியது. வாகா எல்லையில் நூற்றுக் கணக்கான இந்திய மக்கள் திரண்டிருந்தனர். மக்கள் கூட்டத்தின் மத்தியில் வன்முறை வெடிக்க வாய்ப்பு உள்ளது என்பதால் நீண்ட தாமதத்தின் பின்னர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இரவு 9.30 மணிக்கு அபிநந்தன் பாகிஸ்தான் எல்லைக்குள் இருந்து இந்தியாவின் எல்லைக்குள் கால் பதித்தார். (ம)

# இந்திய ஊடகங்கள் போரைத் தூண்டுகின்றன

## இம்ரான் கான் கொதிப்பு

இஸ்லாமபாத்.மார்ச்.2

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான், பாகிஸ்தான் ஊடகங்கள் போர் குறித்தான எதையும் கூறவில்லை. ஆனால், இந்திய ஊடகங்களால் இந்தியாவில் போர் குறித்துத் தூண்டப்படுவது வருத்தமடையச் செய்துள்ளது என்றார்.



புல்வாமா தாக்குதல், இந்திய வான்படையினரின் அத்துமீறிய தாக்குதல், இந்திய விமானி சிறைப்பிடிப்பு என்று இந்தியா - பாகிஸ்தான் இடையில் போர்ப் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில் அமைதி மற்றும் நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானி அபிநந்தன் விடுவிக்கப்படுவார் என்று இம்ரான் கான் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், போர் குறித்து இந்திய ஊடகங்களால் தூண்டப்படுவது வருத்தமடையச் செய்துள்ளது என்றும், நாங்கள் இந்தியாவுடன் பேசுவதற்கு முன் வந்துள்ளோம். ஆனால் அவர்களது தரப்பிலிருந்து வரும் செய்திகள் நல்ல விதத்தில் இல்லை என்றார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய மக்கள் தற்போதுள்ள அரசின் போர் பற்றிய தூண்டுதலை ஆதரிக்கவில்லை. இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் மோதல் எல்லாவற்றுக்கும் காரணம் காஷ்மீர். நான் இந்திய மக்களிடம் கடந்த நான்கு வருடங்களாகக் காஷ்மீரில் நடப்பது குறித்த கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். காஷ்மீரில் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

காஷ்மீர் தலைவர்கள் ஒரு கட்டத்தில் இந்தியாவிலிருந்து பிரிவினையைக் கேட்கவில்லை. இந்தியா இழைத்த கொடுமைகள் காரணமாகவே அவர்கள் இப்போது சுதந்திரம் கேட்கிறார்கள்.

ஏன் 19 வயது இளைஞர் மனித வெடிகுண்டாக மாற வேண்டும்? காஷ்மீரில் நடப்பவை அனைத்துக்கும் பாகிஸ்தானைப் பழிசுமத்துவது முறையற்றது. நாங்கள் மோதலை விரும்பவில்லை என்று தெரிவிக்க இந்தியத்தலைமைஅமைச்சர்மோடிக்கு நேற்று மாலையிலிருந்து தொலைபேசியில் முயற்சித்து வருகிறேன் - என்றார்.

**விமர்சனங்கள்**

பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றதுமுதல் இம்ரான் கான் இந்தியாவுடன் பேச்சு நடத்துவதற்குப் பல தடவைகள் வெளிப்படையாகவே அழைப்பு விடுத்திருந்தும் இந்திய அரசு அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

இந்திய ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் அனைத்தும் பொறுப்பற்றவையாகவும், பிரச்சினையை அணுகாமல் 'இந்தியா' என்கிற போலிக் கோஷத்துடன் வெளிவருகின்றன என்று இவை குறித்து அரசியலவதானிகள் மத்தியில் விமர்சனங்கள் நிலவுவது குறிப்பிடத்தக்கது.





## 'வாகா' வழியாக விமானி விடுதலை

### பாகிஸ்தான் தெரிவிப்பு

இஸ்லாமபாத்.மார்ச்.2

பாகிஸ்தானுக்குள் அத்துமீறித் தாக்குதல் நடத்தியபோது பாகிஸ்தான் துருப்புகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுச் சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய விமானி அபிநந்தன் வாகா எல்லை வழியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று பாகிஸ்தான் அயலுறவுத் துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்றுத் தெரிவித்தார். இந்திய விமானி சிறைப்பிடிக்கப்பட்டபின்னர் கடந்த வியாழக்கிழமை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பேசிய அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் இம்ரான் கான், "அமைதி மற்றும் நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானி அபிநந்தன் விடுவிக்கப்படுவார்" என்று அறிவித்தார். அவர் இவ்வாறு அறிவித்தபோது நாடாளுமன்றிலிருந்த அனைவரும் கரகோஷங்கள் எழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்த நிலையில், பாகிஸ்தான் அயலுறவுத் துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகலில், வாகா எல்லை வழியாக இந்திய விமானி அபிநந்தன் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று அறிவித்தார்.

## லாகூர்- அட்டாரி இடையேயான தொடருந்துச் சேவைகள் நிறுத்தம்

லாகூர்.மார்ச்.2

பாகிஸ்தான்- இந்தியா இடையே பதற்றமான சூழல் நிலவி வருவதைக் கருத்தில் கொண்டு, பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள லாகூரிலிருந்து பஞ்சாப் மாநிலத்திலுள்ள அட்டாரி நகரை நோக்கிய இருவழிப்போக்குவரத்துத் தொடருந்துச் சேவைகளும் நிறுத்தப்படுவதாகப் பாகிஸ்தானின் அயலுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் விடுத்த அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது. 'சிம்லா' ஒப்பந்தத்தின் பயனாக இந்தியா-பாகிஸ்தான் இடையே 1976ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொடருந்துச் சேவை நடக்கிறது. பாகிஸ்தானின் லாகூர் நகருக்கும், இந்தியாவின் அமிர்தசரஸ் நகருக்கும் இடையே ஆரம்பத்தில் இருந்த இந்தச் சேவை பின்னர் காலிஸ்தான் அமைப்பினரின் அச்சுறுத்தலால் லாகூரில் இருந்து, பஞ்சாப்பின் அட்டாரியுடன் நிறுத்தப்பட்டது. புல்வாமா தாக்குதலுக்குப் பின்னர் இதில் மக்கள் குறைந்து விட்டதாகவும், லாகூரில் இறுதியாகப் 16 பயணிகளுடன் புறப்படவிருந்த நிலையில்தான் இந்தச் சேவையை இடைநிறுத்தியதாகவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.



## எமது போர் மதத்துக்கு எதிரானது அல்ல


### இஸ்லாமிய மாநாட்டில் சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

அபுதாபி.மார்ச்.2

தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்பது எந்த ஒரு மதத்துக்கும் எதிரானது அல்ல என்று இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பு மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தியாவின் அயலுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். அபுதாபியில் நடந்து வரும் இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்லாமிய நாடுகளின் அயலுறவு அமைச்சர்கள் பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். இஸ்லாமிய நாடுகளிடையே ஒத்துழைப்பு, வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இஸ்லாமிய நாடுகள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ள நிலையில் சிறப்பு விருந்தினராக இந்தியாவுக்கு இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பு அழைப்பு விடுத்தது. இந்த மாநாட்டில் பாகிஸ்தானின் அயலுறவு அமைச்சர் பங்குகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியா சார்பாக சுஷ்மா சுவராஜை அழைத்ததாலேயே பாகிஸ்தான் அயலுறவு அமைச்சர் இதில் பங்குகொள்ளவில்லை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



## தேர்தலை இலக்கு வைத்தே போர்

புதுடெல்லி.மார்ச்.2

பாகிஸ்தானுக்குள் ஊடுருவி இந்திய வான் படையினர் நடத்திய தாக்குதலால் இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்கு ஆதரவான நிலை உருவாகி இருக்கிறது என்று பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா தெரிவித்தார். "இந்திய வான் படை நடத்திய தாக்குதலுக்குப் பின் மோடிக்கு ஆதரவான அலை அதிகரித்துள்ளது. கர்நாடகத்தில் 22 இடங்களை அவர் கைப்பற்றுவது உறுதி" என்று தெரிவித்தார் எடியூரப்பா. எடியூரப்பாவின் இந்தப் பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியும் இது குறித்து விமர்சித்தது. அணுசக்தி ஆயுதங்களைக் கொண்ட இரண்டு நாடுகளை உச்சபட்ச பதற்ற நிலைக்கு இட்டுச் செல்வதன் பின்னால் அரசியல் விளையாட்டு இருக்கிறது. இது வெளியே தெரிய இரண்டு நாள்கள் ஆகியிருக்கின்றன.

இதற்கான காரணம் தேர்தலே. இந்தக் காலகட்டத்தில், எந்தத் திட்டமும் இரகசியமாகவே இருக்க முடியாது. இந்தியர்களே குறித்துக்கொள்ளுங்கள் போருக்கு 'நோ சொல்லுங்கள்' என்று அது தெரிவித்துள்ளது.

## விமானியை விடுவிப்பது பாராட்டுக்குரியது

### அமெரிக்கா தெரிவிப்பு

வோஷிங்டன்.மார்ச்.2

பாகிஸ்தானுக்குள் அத்துமீறித் தாக்குதல் நடத்திய இந்திய விமானி அபிநந்தனை விடுவிக்கும் பாகிஸ்தான் அரசின் முடிவு வரவேற்கக்கூடியது என்று அமெரிக்கா தெரிவித்தது.

அபிநந்தனை விடுவிக்கப் பாகிஸ்தான் எடுத்த முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

அது குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் வெளியிட்ட அறிவிப்பில், "பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் இந்திய விமானி அபிநந்தனை விடுவிக்க எடுத்த முடிவை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளும், தங்கள் பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேரடிப் பேச்சுக்களை நடத்தி, இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும். என்று தெரிவித்தார்.


# நின்ற ரயிலுடன் மோதியது வந்த ரயில் சம்பவ இடத்திலேயே சாரதி சாவு

*பிறேசிலில் சம்பவம்*

றியோடி ஜெனீரோ.மார்ச்.2

பிறேசிலில் நின்றுகொண்டிருந்த தொருந்துடன் வேகமாகப் பயணித்த வேறொரு தொடருந்து மோதியதில் தொடருந்துச் சாரதி ஒருவர் சாவடைந்தார். பிரேசிலின் ரியோ டீ ஜெனிரோ நகரின் வடக்குப் பகுதியில் சாவோ கிறிஸ்டோவோ என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது. தரிப்பிடத்துக்கு வந்த தொடருந்தில் இருந்து பயணிகள் இறங்கிக்கொண்டிருந்தனர். அப்போது அந்தத் தொடருந்தை நோக்கி வேகமாக வந்த மற்றொரு பயணிகள் தொடருந்து நின்றுகொண்டிருந்த தொடருந்துடன் மோதியது. இதனால் ஏற்பட்ட தொடருந்துப் பெட்டிகளுக்கிடையிலான இடிபாடுகளுக்குள் ஒரு சாரதி சிக்கிக் கொண்டார்.

8 மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு அவர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.



2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் ஜப்பானின் டோக்கியோவில் 268 கிராம் எடையுள்ள ஒரு குழந்தை பிறந்தது. அதை மருத்துவமனையில் வைத்துப் பராமரித்துத் தற்போது பெற்றோரிடம் ஒப்படைத்தனர் ஜப்பானின் கீயோ பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த குழந்தை மருத்துவப்பிரிவு மருத்துவர்கள். 2ஆம் உலகப்போரின்போது ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டுகளின் தாக்கங்கள் தற்போது வரை உணரப்படுவதாக இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.



# சோமாலியாவில் குண்டுத் தாக்குதல்கள்

*15 பேர் பரிதாபச் சாவு*

மெகாடிசு.மார்ச்.2

சோமாலியாவின் தலைநகர் மெகாடிசுவில் வணிக நிறுவனங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள வீதியில் ஆயுததாரிகள் நடத்திய மகிழுந்துக் குண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். மக்கள் நடமாட்டம் அதிகமான மக்கா அல் முக்காரமா வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

அந்த வீதியில் வேகமாக வந்த மகிழுந்து வெடித்துச் சிதறியது. வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட அதை ஆயுததாரிகள் வெடிக்கச் செய்தனர் என்று சோமாலியா அரசு தெரிவித்தது.

அத்துடன் அல் ஷபாப் ஆயுத அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. இதுதவிர மேலும் இரண்டு இடங்களில் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது.

சோமாலிய அரசை நீக்கி விட்டு இஸ்லாமியச் சட்டப்படி ஆட்சி செய்ய அல் ஷபாப் அமைப்பு கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பின்லேடனின் மகனின் தலைக்கு ஒரு மில்லியன் அமெ. அறிவிப்பு




வோஷிங்டன்.மார்ச்.2

அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லேடன் குறித்துத் தகவல் அளிப்போருக்கு ஒரு மில்லியன் டொலர்கள் பரிசு அளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்தது. வளர்ந்து வரும் தீவிரவாதத்தில் ஹம்சா பின்லேடனின் பங்கு முக்கியமாக இருக்கிறது என்பதால், இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாக அமெரிக்கா தெரிவிக்கிறது.

ஜிகாத்தின் முடிசூடா மன்னன் என்று அழைக்கப்படும் ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லேடன், பாகிஸ்தானில், வசிப்பதாகவும், ஆப்கானிஸ்தானில் வசிப்பதாகவும், சிரியாவில் இருப்பதாகவும் பலவிதமாக ஏராளம் கிடைக்கவில்லை. தகவல்கள் வெளியாகின. ஆனால், இன்னும் உறுதியான தகவல் இந்த நிலையில், அவர் குறித்த தகவலை அறிய இந்த அறிவிப்பை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. ஒசாமா பின்லேடனை அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொன்ற பின், காணொலி ஒன்றில் பேசிய ஹம்சா பின்லேடன், தனது தந்தையின் சாவுக்குக் காரணமானவர்களை அழிக்காமல் விடமாட்டேன் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஒசாமா பின்லேடன்**

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத்தைத் தாக்கிய அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கா தேடி வந்தது. பாகிஸ்தானில் அபோதாபாத்தில் பதுங்கி இருந்த ஒசாமாவை அமெரிக்கப் படையினர் 2011ஆம் ஆண்டில் சுட்டுக்கொன்றனர்.


ஒசாமா பின்லேடனுக்கு 3 மனைவிகளும், அவர்களுக்குக் குழந்தைகளும் உள்ளனர். அதில் ஒரு மனைவியின் மகன்தான் ஹம்சா பின்லேடன்.

# தங்கச் சுரங்கம் இடிந்த விவகாரம் இந்தோனேசியாவில் சாவுகள் அதிகரிப்பு

ஜகார்த்தா.மார்ச்;.2

இந்தோனேசியாவில் சட்டவிரோதமாகச் செயல்பட்டு வந்த தங்கச் சுரங்கம் ஒன்று நேற்று முன்தினம் இடிந்து விழுந்தது. இந்தோனேசியாவின் சுலாவேசி மாகாணம் போலாங் மோங்கோண்டவ் நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. இந்த விபத்தில் சிக்கிச் சாவடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. சட்ட உரிமம் பெறாமல் செயல்பட்டு வந்த இந்தச் சுரங்கத்தில் தங்கத்தை அகழும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே இந்த விபத்தில் சிக்கிச் சாவடைந்தனர். சுரங்கத்து இடிபாடுகளுக்குள் இன்னும் பலர் சிக்கி இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப் பணி தொடர்கிறது.





# இன்றைய நாள்

**மேடம்:** சிலர் குறை சொல்வர். அதிக உழைப்பு தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற உதவும். பணத்தேவையின் அளவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** முக்கிய செயல் நிறைவேற தாமதமாகலாம். உறவினர்களிடம் இதமான அணுகுமுறை பின்பற்றவும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய திட்டம் நல்லபலன் தரும். பணப்பரிவர்த்தனை சீராகும்.

**மிதுனம்:** எண்ணமும் செயலும் உற்சாகத்துடன் இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. தாராள பணவரவில் விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வாழ்க்கைத் தரம் உயரும். உபரி பணவரவில் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**சிங்கம்:** சொந்த பணியில் மட்டும் கவனம் கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். கூடுதல் பயிற்சியால் சிறந்த தேர்ச்சி பெறலாம்

**கன்னி:** செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து வளரும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். நன்கு பழகியவரிடமும் அளவுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** திட்டமிட்ட உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவீர்கள். முக்கியமான செலவுகளுக்கு பணம் கிடைக்கும்.

**கும்பம்:** வெகுநாள் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். ஆதாய வருமானம் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.




# இலங்கை அணியில் பங்கேற்ற வீரர்களுக்கு பெரும் வரவேற்பு

மன்னார், மார்ச் 2

மூன்றாவது ஆசிய ரோல் போல் போட்டியில் இலங்கை அணியில் பங்குபற்றி வெற்றிவாகையுடன் நாடு திரும்பிய மன்னார் மாவட்ட வீர வீராங்கனைகளுக்கு மன்னாரில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மூன்றாவது ஆசிய ரோல் போல் (உருள் பந்து) வெற்றிக் கிண்ணப் போட்டி இந்தியாவில் கடந்த 21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெற்றது. அதில் இலங்கை உட்பட பத்து நாடுகள் இவ் போட்டியில் கலந்து கொண்டன. இந்தப் பெண்கள் அணியானது மூன்றாவது இடத்தையும் ஆண்கள் அணி

நான்காவது இடத்தையும் தட்டிக்கொண்டன.

நடைபெற்ற போட்டிகளில் இலங்கை அணி சார்பாக மன்னார் மாவட்டத்திலிருந்து பெண்கள் அணியில் மூன்று வீராங்கனைகளும் ஆண்கள் அணியில் நான்கு வீரர்களும் பங்குபற்றியிருந்தனர்.

அவர்களுக்கு மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பொது மக்கள் என பலரும் ஒன்றிணைந்து கடந்த செவ்வாய் கிழமை வரவேற்பளிக்கப்பட்டது.



மன்னார் தீவின் நுழைவாயிலில் மாலையிட்டு மன்னார் மாவட்டச் செயலர் அதிபர் சீ.ஏ.மோகனராஸ், இலங்கை ரோல் போல் (உருள் பந்து) சம்மேளன செயலர் பா.தவேந்திரன், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் நகர பிதா அன்ரனி டேவிசன், மன்னார் நகர சபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட சொக்கோ மாஸ்ரர் விளையாட்டுக் கழக தலைவர் ஜே.எம்.அன்ரன் பிகிராடோ, செயலாளர் கே.சிறீகாந்தன் உட்பட பலர் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட சொக்கோ மாஸ்ரர் விளையாட்டுக் கழகம் வீரர்களுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் ஞாபக சின்னங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

(எ-60)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கரவெட்டி வாலிபர் வட்டம் விளையாட்டுக் கழகம் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கி.சிவநேசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் அணிக்கு 6 பேர் பங்குபற்றும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கரவெட்டி வாலிபர் வட்டம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மேற்படி போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக்கழக அணி 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மேற்படி போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக்கழக அணி 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இனவாலை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 2

அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கூடைப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பழைய பூங்காவில் அமைத்துள்ள கூடைப் பந்தாட்ட திடலில் ஆரம்பமாகின்றது.

மாலை 3 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் யமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டபிளை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 6 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி விளையாட்டுக் கழக அிணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கப்டன் சோமஸ்சுந்தரம்வெற்றிக்கிண்ணத்துக்கான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் கழக அணி மோதவுள்ளது. மதியம் 1 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுகழக அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுகழக அணி மோதவுள்ளது. (எ-23)

## தற்காப்பு கலையக மாணவருக்கு பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பன்னாட்டு சொடோகான் கராத்தே சங்கத்தால் பன்னாட்டு ரீதியில் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் வரணி கிளை தற்காப்பு கலையக மாணவர்கள் 3 தங்கப் பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களை கைப்பற்றி சாதனையை பதிவு செய்துள்ளனர்.



கடந்த சனிக்கிழமை கண்டி டிகன உள்ளக விளையாட்டரங்கில் இந்தத் தொடர் நடைபெற்றது. அதில் இலங்கை இந்தியா பூட்டான் துருக்கி போன்ற நாடுகள் கலந்து கொண்டனர். பதக்கங்களை பெற்ற மாணவர்களுக்கு சிகான் மா.இரத்தின சோதி அவர்களின் மாணவன் சென்சே கே.கமலேந்திரன் பயிற்றுநராக உள்ளனர். (எ-422)

## ஜொலிஸ்ரார், கிங்கொப்பர்ஸ் மோதலில் ஜொலிஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கப்டன் சோமசுந்தரம் வெற்றிக் கிண்ணத்துக்கான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஜொலிஸ்ரால் விளையாட்டுக் கழக அணி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கிறாஸ்கெப்பர்ஸ் அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. மணிவண்ணன் 46 ஓட்டங்களையும், அருண்குமார் 40 ஓட்டங்களையும், பிரசன்னா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் சார்பாக சரண்ராஜ் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

198 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 16.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணியின் சார்பாக அதிகபட்சமாக சரண்ராஜ் 39 ஓட்டங்களையும், சாரங்கள் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பாகக் கோபிராம் 3 இலக்குகளையும், சோபன் 2 இலக்குகனையும் வீழ்த்தினர். (எ-23)

## எல்லே சுற்றுப் போட்டியில் வரணி மத்திக்கு சம்பியன்

கொடிகாமம், மார்ச் 2

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலருக்குமான அணிகளுக்குடையிலான எல்லேப் போட்டிகளில் வரணி மத்திய கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன. இந்தப் போட்டிகள் கடந்த புதன்கிழமை வரணி மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும், வரணி மத்திய கல்லூரி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வரணி மத்திய கல்லூரி அணி 2 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பெண்கள் பிரிவில் இறுதியாட்டத்தில் வரணி மத்திய கல்லூரி அணியும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி 5 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வரணி மத்திய கல்லூரி அணி 6 ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியனானது.

(எ-159,9)





# ஆஸி. வீரர் ஆன்ட்ரூ டை இணைப்பு

ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரண்டாவது ரி-20 போட்டியின் பயிற்சி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணியின் வீரர் கேன் ரிச்சர்ட்சன் காயம் காரணமாக விலகியுள்ள நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில் ஐ.பி.எல். போட்டிகளில் கலக்கிய ஆஸ்திரேலிய அணி வீரர் ஆன்ட்ரூ டை அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை 26 பன்னாட்டு ரி-20 போட்டிகளில் விளையாடி 37 இலக்குகளையும், 7 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 12 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார்.




டிலக்ஷன்


டான்சன்

## வீரர்களின் போர்
# ஸ்கந்தா முன்னிலை

யாழ்ப்பாணம், மார்ச் 2

வீரர்களின் போரின் முதலாம் நாள் ஆட்ட நேர நிறைவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அணி முன்னிலை பெற்றுள்ளது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 144 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிய, ஸ்கந்தா அணி 7 இலக்குகள் இழப்புக்கு 180 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதய கல்லூரி அணி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

ஸ்கந்தா வீரர் டான்சனின் துல்லியமான பந்து வீச்சில், 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது மகாஜனக் கல்லூரி. அந்த அணி சார்பில் கே.கிரிசன் 31 ஓட்டங்களையும், எஸ்.வரலக்சன் 25 ஓட்டங்களையும், மதீசன் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் டான்சன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளைச் சரித்தார். டிலக்சன் மற்றும் அமிர்தசரதன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 43 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அந்த அணி சார்பில் டிலக்சன் 51 ஓட்டங்களையும், பிரசன் 25 ஓட்டங்களையும், சோபிதன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் சதுர்ஜன் 4 இலக்குகளையும், வனுசன், சுஜன், வலக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள். இன்று இரண்டாம் நாள் ஆட்டம் இடம்பெறும். (ஓ.23)

## உலகக் கிண்ணப் போட்டியில்
# அனைவருக்கும் உரிய பாதுகாப்பு
## ஐ.சி.சி உறுதியளிப்பு

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைமை செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள இந்திய கிரிக்கெட் சபைத் தலைமை அதிகாரி ராகுல் ஜோரி, 'இங்கிலாந்தில் மே மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியினர், போட்டி அதிகாரிகள் மற்றும் இந்திய ரசிகர்களுக்கு உயரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதற்கு பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் பதில் அளிக்கையில், 'இந்திய அணியினர் உட்பட அனைவருக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும்' என்று உறுதி அளித்தார்.

ICC

# கெய்ல் இலகுவாக ஆறு ஓட்டங்களை அடிப்பவர் - பட்லர்

மேற்கிந்தியத்தீவுகள்- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி வீரர் பட்லர் 12 ஆறு ஓட்டங்கள், 13 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 150 ஓட்டங்களைப் பெற்றார்.

அந்தப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் கெய்ல் ருத்ர தாண்டவம் ஆடியிருந்தார்.



அவர் 14 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 162 ஓட்டங்களை எடுத்தார்.

இந்தப் போட்டி குறித்து பட்லர் தெரிவிக்கையில் "கிறிஸ் கெய்ல் போன்று எளிதாக ஆறு ஓட்டங்கள் விளாசும் வீரரை நான் பார்த்ததே இல்லை. கிரிக்கெட்டின் லெஜெண்ட் கெய்ல்" என்றார்.

கிறிஸ் கெய்ல் தெரிவிக்கையில் "தற்போதைய நிலையில் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக பட்லர் காணப்படுகின்றார் -என்றார்.

# ஆஸி. – இந்தியா ஒருநாள் இன்று


இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற ரி-20 போட்டியை ஆஸ்திரேலியா அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றி பெற்றது.


இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையில் 5 ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளது. முதலாவது ஒருநாள் போட்டி இன்று ஹைதராபாத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் இந்திய அணி சொந்த மண்ணில் தொடரை இழக்காது ஆஸ்திரேலியாவுக்கு பதிலடி கொடுக்குமா என்று ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

## ராவல், லாதம் சதத்துடன்
# நியூசி. வலுவான நிலை திணறும் பங்களாதேஷ்

பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. நேற்று முன்தினம் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி தடுமாறியது. நேற்றைய முதல் இன்னிங்ஸின் இரண்டாம் நாளில் நியூசிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 234 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.





பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ராவல் அரைச் சதம் கடந்து 51 ஓட்டங்களுடனும், லாதம் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது நேற்றைய இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர்.

இருவரும் அணிக்கு சிறப்பானதொரு அடித்தளத்தையிட்டனர். ஆரம்பத், துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் சதம் கடந்து அணிக்குப் பலம் சேர்த்தனர். அணி 254 ஓட்டங்களைப் பெற்ற போதே முதலாவது இலக்கு இழக்கப்பட்டது. ராவல் 132 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இணைந்தார் அணித் தலைவர் வில்லியம்சன். லாதம் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 17 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 161 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரெய்லர் வெறும் 4 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். நான்காவது இலக்குக்காக 100 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்டது. நிக்கோலஸ் அரைச் சதம் கடந்து 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் அணி 4 இலக்குகளை இழந்து 451 என்ற இமாலய ஓட்ட எண்ணிக்கையைக் குவித்தது. களத்தில் வில்லியம்சன் 93 ஓட்டங்களுடனும், வோக்னர் ஓர் ஓட்டத்துடனும் இருக்க ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. நியூசிலாந்து அணி 6 இலக்குகள் கைவசமிருக்க, 217 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

பந்து வீச்சில் சர்கார் 2 இலக்குகளையும், ஹசன் மிர்சா, முகம்த்துல்லா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



### கோபா டெல் ரே கால்பந்து

# ரியல் மட்ரிட்டை வீழ்த்தி பார்சிலோனா இறுதிக்கு

கோபா டெல் ரே கால்பந்து கிண்ணத்துக்கான அரையிறுதி ஆட்டத்தில் பார்சிலோனா - ரியல் மட் ரிட் அணிகள் நேற்றுமுன்தினம் பலப் பரீட்சை நடத்தின. இதில் பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட்டை வீழ்த்தி வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் பார்சிலோனா வீரர்கள் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். 50ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் சுவாரஸ் ஒரு கோலைப் போட்டார். 69ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவுக்கு இன்னொரு கோல் கிடைத்தது. அந்த அணியின் வீரர் ரபேல் வரானே ஓன் அதனைப் பெற்றுக் கொடுக்க 2:0 என்ற கணக்கில் பார்சிலோனா முன்னிலையானது. தொடர்ந்து 73ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணிக்கு பெனால்டி வாய்ப்பு ஒன்று கிடைக்க அதனை பார்சிலோனா வீரர் சுவாரஸ் கோலாக மாற்ற பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் ரியல் மட்ரிட்டை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது.

## மக்ஸ்வெல், ராகுல் முன்னேற்றம்

ரி-20 பன்னாட்டு தரப்படுத்தலில் இந்திய அணி வீரர் லோகேஸ் ராகுல், ஆஸ்திரேலிய அணி வீரர் மக்ஸ்வெல் இருவரும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இரண்டு ரி-20 போட்டியின் முதல் போட்டியில் இந்திய அணி வீரர் ராகுல் 50 ஓட்டங்களும், 2ஆவது போட்டியில் 47 ஓட்டங்களும் பெற்றதன் மூலம் இவர் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 6ஆவது இடத்துக்குமுன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர் மக்ஸ்வெல் முதல் போட்டியில் 56 ஓட்டங்களும், 2ஆவது போட்டியில் ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களும் குவித்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அணிகளுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்தை பின்தள்ளி ஆஸ்திரேலியா 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

## இங்கிலாந்து - மே.இ.தீவுகள் இறுதி ஒருநாள் இன்று

இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இடம்பெற்று வரும் 5 ஒருநாள் போட்டியில் இரு அணிகளுக்குமான இறுதிப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது. நடைபெற்று முடிந்த ஒருநாள் போட்டிகளின் அடிப்படையில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. ஒரு போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. இறுதிப் போட்டி இரு அணி வீரர்களுக்கும் வாழ்வா? சாவா? என்ற போராட்டமாக காணப்படும் என்பதில் ஐயமில்லை. ரசிகர்களுக்கும் சிறந்த விருந்தாக இந்தப் போட்டி அமையும். கடந்த போட்டியிலும் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டன. இறுதிப் போட்டியிலும் சாதனைகள் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலிக் கூட்டமும்



யாழ்ப்பாணம்
போதனா மருத்துவமனையின்
நோய்க்கூற்று ஆய்வாளரும்
யாழ்ப்பாண பல்கலைக்கழக
மருத்துவ பீடத்தின்
முன்னாள் விரிவுரையாளருமான
வைத்தியக் கலாநிதி
**வை.சி.பத்மநாதன்**
கடந்த
24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
கனடாவில் காலமானார்.
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையும் நினைவு அஞ்சலிக் கூட்டமும்
இல. 105, இராச வீதி, கோப்பாய் தெற்கு என்னும்முகவரியில்
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல்
10 மணிவரை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார்.
உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 . 03 . 1990 | 27 . 02 . 2019 |

## நிஷானி திருச்செல்வம்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நிஷானி திருச்செல்வம் கடந்த (27.02.2019) புதன்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் திருச்செல்வம் (தவம்) காலஞ்சென்ற நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் சியானா, திவாகரன், சிந்துஜா, ஆகியோரின் அன்பு சகோதரியும் றொயிந்தன், சுதர்சன் ஆகியோரின் மைத்துனரும் அபர்ணன், அஸ்னா ஆகியோரின் அன்பு சித்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பூ.நவரத்தினம் (காந்தி)**
**சிறியதந்தை**

**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்**


### வேலையாள் தேவை

மீசாலை, புத்தூர் சந்தியில் இயங்கிவரும்
நிமல் வெல்டிங்(மின் ஒட்டு) தொழிலகத்திற்கு
வேலை தெரிந்த அல்லது பழக
விரும்புபவர்கள் தேவை. (CS 00561) (14.17)

**077 345 6552**

### சிவராத்திரி தலயாத்திரை



**புனித ஈச்சரங்கள்**

திருக்கோணேஸ்வரம்
திருக்கேதீஸ்வரம் (பாலாவி)
நகுலேஸ்வரம் (கீரிமலை)

**ஆரம்பம் : 04.03.2019**
**பிற்பகல் : 1.00 மணிக்கு**

**கட்டணம் : 1700/=**

**ஏற்பாட்டாளர்கள் : 077 711 4828, 077 719 1803**

**உலா**
**10/1, செட்டித்தெரு ஒழுங்கை**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

### வேலையாள்கள் தேவை

**Photo shop. Designing, Typing**

மிகவும் திறம்படத் தெரிந்த பெண்கள் எமது
நிறுவனத்துக்கு தேவை.
**காலை 9.00 - 4.00 வரை**
எமது நிறுவனத்துக்குத் தொடர்பை ஏற்படுத்தி
சமுகம் தரவும்.

**GN Printers**
தகவல் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக (Kokkuvil)
077 015 1517, 072 474 1687

### பணியாளர்/ விற்பனை பிரதிநிதிகள் தேவை

நல்லூர் கோயிலுக்கு முன்பாக உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் / பணியாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் நேர்முகத் தேர்வில் பங்குபற்றலாம். முன்னனுபவம் அவசியம் அற்றது. இன்று, நாளை, நாளை மறுநாள் ஆகிய தினங்களில் எமது நிறுவனத்தில் நேர்முகத் தேர்வு காலை 9.00 மணிவரை இடம்பெறும். கவர்ச்சிகரமான சம்பளம், ஊக்குவிப்பு வழங்கப்படும்.

**கனினி மையம்,**
**521B, பருத்தித்துறை வீதி, நல்லூர்.** (CS 23701/15/18)
077 678 8243, 077 598 4511

### வேலைவாய்ப்பு

**1. பயிற்சி**

**மோட்டார் சைக்கிள் அனைத்து வகையான வேலைகளும் மற்றும் சேவிஸ்**

* 6 மாத பயிற்சி காலத்தின் போது சம்பளத்துடன்.
* அதன் பின்னர் நிரந்தரமான வேலையில் இணைத்துக்கொள்ளல்
* ஒருவருடத்தின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்

**2.வேலைவாய்ப்பு**

* மோட்டார் சைக்கிள் மெக்கானிக் மற்றும் சேவிஸ்
* வாகன சேவிஸ்
* பெயின்ரிங், ரிங்கறிங், வெல்டிங்

**3.வேலைவாய்ப்பு**

* மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியறை மற்றும் சேவை நிலையம்
* மோட்டார் சைக்கிள் விற்பனையாளர். (ஆண்கள், பெண்கள்)
* எழுதுநர் (சிட்டை - ஆண்கள், பெண்கள்)
* மேற்பார்வையாளர் (ஆண்கள், பெண்கள்)
* காசாளர் (ஆண்கள், பெண்கள்)
* வாடிக்கையாளர் சேவை (ஆண்கள், பெண்கள்)

**R.R.S.C மோட்டோர்ஸ் எஞ்சினியர்ஸ்**
No.14, சுதுமலை வீதி, மானிப்பாய் (சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமை)
077 310 7549, 021 492 7657


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.